தென்றல்

வார இதழ்

ஆசிரியர்:
கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை-6.

மலர் 6 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1991, தை 17 (30-1-'60). சனிக்கிழமை | இதழ் 33

திராவிடக் கலைஞர்!

★

தமிழும் எழிலும் விளையாடும் இத்தாயகத்தில்தான் கல்லும் கதை சொல்லும் என்று சொல்லி வைத்தனர். ஆம்! வெங்கடேசன் கையிலே வெண்கலமும் கதை சொல்கிறது! நாட்டு நிலையும் சொல்கிறது!

உயிரோவியங்களைத் தூசி மறைப்பதும், ஒளி மணிகள் மண்ணுள் புதையுண்டு போவதும் அன்றாட நிகழ்ச்சிகள். அதே நிலையில் தான் சிற்பி வெங்கடேசனும் இருக்கிறார். ஆற்றல் செறிந்த அருங்கலைஞரான அவரின் படைப்புக்கள் சிலவற்றை அண்மையில் கண்டேன். ஒவ்வொன்றிலும் ஒரு தனி நயத்தைக் காட்டும் பெருந்திறமை அவரிடம் மண்டிக் கிடக்கிறது. தமிழகத்தின் தனிப்பெருந் தலைவர்களை எல்லாம் வெங்கலச் சிலையுருவில் வடித்தெடுத்து வைத்திருக்கிறார் இவர்:

அண்மையில் அண்ணாவின் சிலையை வடித்ததும், "காணவாரீர்!" என்றார். அவரது கலையரங்கத்துக்குள் காலெடுத்து வைத்ததும் நான் என்னை மறந்தேன். என்னுடன் வந்திருந்த நண்பர் தன் ஊன் உணவை மறந்தார்.

கலைவயப்பட்ட தமிழகத்தின் திறன் கூறும் வரலாற்றுச் சின்னங்களை மாமல்லையிலும், சித்தன்னவாசலிலும் மதுரையிலும் தஞ்சையிலும் மற்றும் பன்னூறு இடங்களிலும் காணலாம்.

— 2-ம் பக்கம் —

திராவிடக் கலை வளர்ப்பீர்!

—1-ம் பக்கத் தொடர்ச்சி—

ஆண்டுகள் பல நூறு மறைந்தும், ஒளி மறையாதிருக்கும் உயிரோவியங்களை, பேசும் பொற்சிலைகளை இன்றும் அங்கே காண்கிறோம். ஆனால் புதியன படைக்கும் திறன் பற்பல சூழ்நிலைகளால் மங்கிவிட்டது என்று வருந்தினோம். இந்நாளில் இங்கங்கே தோன்றிய ஓரிரு சிற்பிகள், தம் கைவண்ணத்தால் நம் மனக்கவலையைத் தீர்க்கின்றனர். வாழும் தலைமுறையில் நம் ஏமாற்றத்தைத் துடைத்திடும் திருப்பணிகளைச்செய்து வருகிறார் திரு. வெங்கடேசன்.

கலை மணக்கும் இராவ்பகதூர் நாகப்பாவின் குடும்பத்தைச் சேர்ந்தவர் வெங்கடேசன். நாகப்பாவின் தங்கைமகன் இவர். தலைமுறை தலைமுறையாகக் கலைவளர்க்கும் குடும்பத்தில் பிறந்த இவர், சென்னை அரசினர் கலைப்பள்ளியில் சிலை செய்யும் வகுப்பில்(Modelling) முறையாகப் படித்துப் பட்டம் பெற்றவர். வகுப்பில் முதல்வராகத் தேறியதால் இராவ் பகதூர் என். ஆர். பாலகிருட்ண (முதலியார்) பொற்பதக்கத்தைப் பரிசாகப் பெற்றார். 1940 முதல் அவர் பயின்ற பள்ளியின் முதல்வரான திரு. டி. பி. ராய் சௌத்ரியிடம் முதல் துணையாளராகப் பணியாற்றினார். திரு. ராய்சௌத்ரியின் பெயரால் விளங்கும் பீகார் நினைவுச்சிலையிலும் சென்னை-மரீனா "உழைப்பின் வெற்றி"ச்சிலையிலும் வெங்கடேசனின் கைவண்ணம் விளையாடியிருக்கிறது. வெங்கடேசனின் சிலைகளும் சிற்பங்களும் இந்தியத் துணைக்கண்டமெங்கும் நடைபெற்ற பல சித்திரச் சிற்பக் கண்காட்சிகளில் இடம்பெற்றுள்ளன. 1954-ம் ஆண்டு தில்லிக் கல்வியமைச்சின் சார்பில் தேசியக் கலைக்கூடத்தினர் நடத்திய முதல் சிற்பக்கலைக் காட்சியில் இவர் சிற்பமும் இடம்பெற்றது குறிக்கத்தக்கது. இவர் 1950 51,-52-ம் ஆண்டுகளில் சென்னை அரசினர் கலைப்பள்ளி ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

இவருக்குப் பிடித்த பாணிகள் தத்ரூபம், நவீனம், கிழக்கத்தியப் பாணிகள் முதலியன. இக்கலையைப் பயில்வது எளிதில்லை. முதலில் சித்திரம் நன்றாக வரையத் தெரிந்திருக்கவேண்டும். அத்தோடு மனிதனின் எலும்புஅமைப்பு தசைஅமைப்பு முதலிய உடற்கூறுகளும், அவற்றைத் தெரிவிக்கும் உள்ளமைப்பு இயலும் கற்றிருக்க வேண்டும். மனிதன் ஒருவன் சிலையைச் செய்வதென்றால் அவனை நேருக்குநேர் நிறுத்திப் பார்க்கவேண்டும். பின்னர் அவனது பாவம், குணம், உணர்ச்சி, சாயல் முதலியன உணர்ந்து அமைத்திடல் வேண்டும். மூலச்சிலைகள் ஒருவகைக் களிமண்ணில் செய்யப்படுகின்றன. அவற்றிலிருந்து வெங்கலச் சிலைக்கான அச்சுக்கள் எடுப்பதால் அவற்றைக் கெடாமல் பாதுகாக்கவும், அச்சுக்களிலிருந்து பல பிரதிகள் எடுக்கவும் அறிந்திருத்தல் வேண்டும். இவற்றையும் இன்னும் பலவற்றையும் பொறுமையாகக் கற்றறிந்து இன்று வெங்கலத்தையும் சலவைக்கல்லையும் பேச வைக்கிறார் வெங்கடேசன்.

அவரது கலை உணர்வும் திறனும் பல பல தடைகளால் மூடப்பட்டிருக்கின்றன. முதற் குற்றம் அவர் திராவிடராய்ப் பிறந்தது! இரண்டாவது குற்றம் திராவிடக் கலைஞர்களை ஊக்குவிப்போர் ஆட்சியில் அமர்ந்துள்ளது! அன்று மன்னர்கள் கலைஞர்களை ஆதரித்தனர். இன்று மன்னர்களைத் தூக்கியெறிந்து விட்டு ஆட்சிக்கு வந்திருக்கும் துணைக்கண்ட ஆட்சியாளர்கள் திராவிடக் கலைஞர்களையும் தூக்கி எறிந்து விட்டனர்.

திரு. வெங்கடேசன் போன்று தனியே கிடந்துழலும் கலைஞர்களை ஊக்குவிப்பதை விடுத்து, இந்த அரசினர், ஏற்கனவே அரசினர்பள்ளி நிழலிலிருந்து கொண்டு ஆயிரம் இரண்டாயிரம் சம்பளம் வாங்குவோருக்கே சலுகைகள் தருகின்றனர். அரசினருக்காகத் தேவைப்படும் சிலைகளையும் சிற்பங்களையும் அந்த முதலைகளிடமே தந்து பத்தாயிரம் இருபதினாயிரம் என்று காணிக்கை செலுத்துகின்றனர். ஆனால் கண் திறந்தும் பார்ப்பதில்லை ஏழைக் கலைஞர்களை

மாநில அரசினர் இப்படி என்றால் தில்லி அரசைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா? வெளிநாட்டு அரசுகள் உதவிச் சம்பளம் கொடுத்து, தம் கலைகளை அறிய வருமாறு இந்தியத் துணைக்கண்டக் கலைஞர்களை அழைக்கின்றன. ஆனால் தில்லி ஆட்சி ஓர் அனில் ராய்சௌத்ரியையோ அவரது சொந்தக்காரர்களையோ தான் திரும்பத்திரும்ப அனுப்புகிறது. அவர்கள் வெளிநாடு சென்று கலைகளைக் கற்பதற்குப் பதிலாக எதையெதையோ கற்று வருகின்றனர். இங்குள்ள வெங்கடேசர்கள் அங்குள்ள கலையை அறிவதற்கும், திராவிடக் கலையின் பெருமையை அங்குப் பரப்புவதற்குமான வாய்ப்புக்கள் தரப்படுவதேயில்லை. ஆமாம்! வெங்கடேசர்களின் புகழ் வெளிநாட்டில் பரவினால் பின் நேருவின் கலையை எவரே மதிப்பர்?

வெங்கடேசன் ஒருமுறை சென்னை அரசினர் கலைப்பள்ளியில் சிலைவகுப்பு ஆசிரியர் பதவிக்குப் போட்டியிட்டார். இவர் அதே பள்ளியில் அதே வகுப்பில் பயின்று, முதல்வராகத் தேர்ந்து தங்கப்பதக்கம் பரிசு பெற்றிருக்கிறார். அறிக்கையில் கோரப்பட்டிருந்த அத்தனை தகுதிகளும் இவருக்கிருக்கின்றன. அதே பள்ளியில் அதே வகுப்பில் ஏற்கனவே மூன்று முறை தற்காலிகமாக ஆசிரியராக இருந்திருக்கிறார். வேலைக்காக நடந்த தேர்வில் மற்றவர்களைவிட நன்றாகச் செய்திருக்கிறார்; பதில் சொல்லியிருக்கிறார். எனினும் அவருக்கு இந்தப் பதவி தரப்படவில்லை. இந்த வகுப்பில் பயிலாத, தேர்வில் ஒழுங்காகப் பதில் சொல்லாத வேறு ஒருவருக்கு அந்தப்பதவியைத் தந்துவிட்டனராம். எனின், தான் கொடுத்த சான்றிதழையே மதிக்காத இந்தக் கல்லூரியின் சான்றிதழ்களை வைத்திருந்தென்ன? தீயிலிட்டென்ன?

மாநில அரசினர், காலத்தே இவற்றையெல்லாம் கவனிக்கவும் நல்வழி பார்க்கவும் வேண்டுகிறோம்.

அன்று வாழ்ந்த எவனோ ஒரு சிற்பியின் கைவண்ணத்தால் சாக்ரட்டீசை நாம் இன்றும் பார்க்கமுடிகிறது. ஆம்! உலகைக் கவர்ந்த பெருமக்களின் உருவத்தை எல்லாம் சிலை வடிவில் என்றும் காணத் தருகின்ற திறனுள்ளோர் கலைஞர். அவர்களை மறந்தால் நாளை இந்த நாட்டில் ஆண்டவர்களின் சுவடுகளைக்கூட நாம் பார்க்க முடியாது!

அண்ணா ஒரு புதிய சமுதாயத்தைப் படைத்தார்! அவரை வெங்கடேசன் சிலையில் படைத்தார்! அதுவே இந்த இதழின் முகப்பு. வாழ்க! வாழ்க!

—மா. பாண்டியன்.

குறவன்-குறத்தி

ஏழையர் ஓய்ந்த நேரங்களில் எளிதாகப் பெறும் இன்பங்களுள் குறவன் குறத்தி நாட்டியமும் ஒன்று. சாதாரணச் சொற்களும் எளிய ஓசைப் பாடல்களும் இந்நாட்டியத்தின் இன்பக் கருவிகள். முன்னர் இக்குறவன் கூத்தே குறவஞ்சிப் பிரபந்தங்களாக இயற்றப்பெற்று நாட்டு வளத்தையும் கதைத் தலைவன் பெருமையையும் உரைத்தன. இன்றோ இக்குறவன் குறத்தி கூத்துக்களில் நம் காலத்தில் வாழ்ந்து மடிந்த காந்தியார், தாளமுத்து-நடராசன் போன்றோர் வாழ்க்கைகளும், அந்தந்த வட்டாரங்களில் பெயர்பெற்ற கொலைக் கதைகளும் பாடப்படுகின்றன. தென் மாவட்டங்களில் இக்கூத்தின் நடிகர்கள் ஆடை அமைப்பில் தனிக் கவனம் செலுத்துகின்றனர். மேலேயுள்ள படம் செங்கல்பட்டு மாவட்ட ஆட்டம் ஒன்றில் எடுத்தது.

எடுத்தவர்: திரு. பிலோ இருதயநாத்.

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 6 | 30-1-'60 | இதழ் 30

வெற்றித் திருமகளே, நீ எந்தப் பக்கம் ?
வேங்கைக் குலமே, நீ எந்த வழி ?

மலைஞாலம் ! ஒருநாள் அது திறல்மிகு வேந்தர் செங்கோலோச்சிய அழகுத் தோட்டம் ! இன்று அது, குடியாட்சி நெறியின் கொலைக்களம் !

மன்னராட்சியின்போது இருந்த ஓரளவு அமைதியும் "தில்லி வாழ் காசுமீர் மைனர்கள்" தலை எடுத்த பின்னர் அழிந்துவிட்டது. இனியாகிலும் மலைக் காடுகளுக்கு ஓடிவிட்ட அமைதி நாட்டுக்குத் திரும்புவதா ? அன்றி, மலைஞாலம் சுடுகாடாகவே அழிவதா ?-இந்த வினாக்களுக்கு விடையிறுக்க இருக்கிறது நாளை மறுநாள் கேரளம்.

சேரநாடாய் இருந்த நாள்தொட்டு, கேரளம் வரலாற்றில் தனக்கென ஒரு தனி இடத்தை வகித்து வந்திருக்கிறது, வடவர் முடி நெறித்த சேரன் செங்குட்டுவன் இந்த மாநிலத்தில் தான் விளையாடினான். அவனைக் காண வந்த கவிவாணர்களும் பல்துறை வணிகர்களும் உலவிய வஞ்சிமாநகர் இந்த மண்ணில்தான் இருந்தது. பொருள் தேடி வந்த மேலை நாட்டுக் கலங்களெல்லாம் நங்கூரம் பாய்ச்சிய கள்ளிக்கோட்டையும் இந்த மண்ணிலேதான் இருக்கிறது. அண்டிப் பிழைத்த நச்சரவு தலை தூக்கியதால் சமுதாயம் சீர்கேடுற்றது. அப்போது சமூகத்தைத் திருத்தத் துடித்தெழுந்த குமரன்ஆசான் வாழ்ந்ததும் இந்த மண்ணில்தான். துணைக்கண்டத்தின் தலை சிறந்த எழுத்தாளர்கள் பலர் தம் கருத்துக்களைப் பொழிந்ததும் இந்த மண்ணிலிருந்துதான். கல்வியறிவு மிகவும் பெற்று முன்னிற்பதும் இம்மண்தான். ஆம் ! திராவிடப் பெருமைகளின் ஓர் உறுப்பாய் கலைநயத்தையும் மொழி வளத்தையும் இனப் பெருமையையும் வளர்த்தது, மலைஞாலம்.

மலைஞாலம் மலையாளம் ஆனது, பிறமொழிகளின் வெறியாட்டத்தால். அம்மலையாளமும் சுடுகாடானது, அரசியற் சூதாட்டக்காரர்களால். "மண்ணும் வளமும் தனியொருவன் கைகளில் சிக்கிக் கிடக்கும் கொடுமையைத் தவிர்த்திடுவோம் !" என்றனர், பாரதச் செல்வர்கள். மலைஞாலம் மத வேழமென எழுந்தது. மண்ணும் வளமும், மலையும் காடும் மன்னன் என்பவன் கைகளிலிருந்து, மக்கள் கைகளுக்கு மாறின. "இனி உண்டு இனிய வாழ்வு !" எனப் பறையறைந்தனர் காங்கிரசார். "கட்டாயம் கிடைக்கும் நல்வாழ்வு, இவர்களுக்கு ஒத்துழைத்தால் !" என்று நம்பவும் செய்தனர் மக்கள். ஆனால் காலப்போக்கில் நாள் செல்லச் செல்லத்தான் தெரிந்தது, மலைஞால மன்னரை ஒழித்துவிட்டு **காங்கிரசு மன்னர்** வருவதற்குத்தான் இத்துணை முயற்சிகளும் என்று. அதனால் மக்கள் தமது வெறுப்பைத் தெரிவித்தனர்; ஆட்சிகள் மாறின. ஒப்பாரும் மிக்காரும் தமக்கில்லையென்று ஒய்யாரப்பண் பாடிக்கொண்டிருந்தோர் வாழ்வுக்கு, மலைஞாலத்தார் ஒப்பாரி வைத்ததும் வெறிகொண்டலைந்தனர் காங்கிரசார். தம்மை ஆட்சி பீடத்திற்கனுப்பாத மக்களைச் சுடுகாட்டுக்கனுப்பத் துணிந்தனர்; அனுப்பினர். எந்த மாநிலத்திலும் ஏற்படாத அளவு இங்கு இருமுறை மாநில நாயகராலும் குடியரசுத் தலைவராலும் ஆட்சி நடத்தப்பட்டிருக்கிறது. மற்றும் நேற்றுத் தோன்றிய அமைச்சரவை இன்று கலைக்கப்படுவதும் கலைவதும் பொது நிகழ்ச்சிகளாகிவிட்டன. இப்படிக் குழப்பங்கள் மிகுந்ததற்குப் பல அடிப்படைகள் உண்டு.

காங்கிரசார் திருவிளையாடல்களும், வேலையில்லாத் திண்டாட்டமும், சாதி வெறிகளும் இங்கே அதிக அளவில் விளையாடியிருக்கின்றன. அவையே இந்தக் குழப்பங்களுக்கு அடிப்படை !

காங்கிரசார் தாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் நாட்டு வளத்தைப் பெருக்குவதற்கான முயற்சிகளில் ஈடுபடவில்லை. மலைக் காடுகளில் சிரிக்கும் அகிலையும் சந்தனத்தையும் தேக்கையும் தேயிலையையும் காப்பியையும் பிறவற்றையும் பயன்படுத்த மறந்தனர். கழனிகளில் மண்டிக் கிடக்கும் வளத்தையும் வெளிக்கொணர இவர்கள் முயலவில்லை. இதனால் அங்கு படித்த பின்னும் வேலை கிடைக்காத இளைஞர் அணி பெருகியது. பசிக் கொடுமை அவர்கள் இதழிலே மறுப்புக் குரலை அறுவடை செய்தது.

"உழைப்பைப் பெற்றுக்கொண்டு உணவு தா !" என்று கோரிய மக்களின் மேல் எரிந்து விழுந்தனர் எங்கோ சென்றுகொண்டிருந்த காங்கிரசு அமைச்சர்கள். உழைக்க மறுப்போர்க்கு உணவும் சலுகையும் தரும் காங்கிரசார், வேலை கேட்போரிடம், "என்ன வேலை இருக்கிறது, எடுத்தெறிய ?" என்று காய்ந்து விழுந்தனர். எனவே, பட்டினி கிடந்தோர் துடித்து எழுந்தனர்; எரிந்து விழுந்தவர்கள் சரிந்து விழுந்தனர். கையாலாகாது சரிந்து விழுந்தவர்களைக் கண்டு எழில் கொழிக்கும் மலைக் குன்றுகள் சிரித்தன; வளம் கொஞ்சும் கடலலைகள் விழுந்துவிழுந்து சிரித்தன;காடு கழனிகளும் வயிறு வெடிக்கவெடிக்கச் சிரித்தன!

இந்த நேரத்தில் சிலர் சரிவிலிருந்து மீண்டும் கரையேற சாதி வெறியைத் தூண்டிவிட்டனர். நாயர் சமூகம் பழம் பெருமை உடைய சமூகம்தான். வலிமை மிக்கதும் கட்டுப்பாடுள்ளதும்தான். ஆனாலும் சாதிகள் உச்சி நிலையிலிருந்த அன்றும் நல்லவர்கள் சாதி வெறியைக் கண்டித்திருக்கின்றனர். அந்த நல்ல மனப்பான்மைக்காரர்கள் பெருகியுள்ள இந்நாட்களிலும் நாயர்களைச் சாதி வெறி கொண்டோராக்கிவிட்டது, மன்னத்து பத்மநாபனின் சூழ்ச்சிதான். அது போன்றே வெளிநாட்டுப் பணத்தால் தங்கள் தொந்தியை வளர்த்துக்கொண்டுவிட்ட கத்தோலிக்கர்கள், ஒழுங்கு தவழ வேண்டிய மாதா கோவிலை வெறியின் பிறப்பிடமாக்கிவிட்டனர். ஏற்கனவே நாயர்களும் கத்தோலிக்கர்களும் மயிரை இழுத்துப் பிடித்து அடித்துக்கொண்டதை எல்லாம் மறைத்துவிட்டு இருவரையும் கூட்டி ஓரணியை உருவாக்கிய மன்னத்து பத்மநாபன், அமைதியின் பகையாகிவிட்டார். இப்படி வம்பு விளைத்தே, தன்னலத்தை அறுவடை செய்துகொண்ட குடிகேடர் அவர். பதவிக்காகவும் பணத்துக்காகவுமே நாயர் இயக்கத்தையும் இந்து மகா மண்டலத்தையும் கட்டி வளர்த்த இந்த ஆளைத்தான், காங்கிரசு பயன்படுத்திக்கொண்டிருக்கிறது. இவர்கள் செய்த ஆர்ப்பாட்டக் கிளர்ச்சிகளால், தில்லி திருவாங்கூர் அரசியலில் தலையிட்டது; குடியாட்சியைக் கொலை செய்தது; மாநிலங்களின் மன்றத்திலே தோழர் எம். பி. பி. நாராயணன் குறிப்பிட்டதுபோல, **குண்டர்களின் ஆட்சி** எழுந்தது.

குண்டர்களின் ஆட்சியா ? குடியாட்சியா ? இனி நிலவ வேண்டியது எந்த ஆட்சி ?-இந்த வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டிய நாளாகிவிட்டது வரும் பிப்ரவரி முதல் நாள்.

ஆட்சியிலிருந்து கவிழ்த்தப் பெற்ற பொதுவுடைமையரணி தனியே நின்று போட்டியிடுகிறது. "தில்லி சுல்தான்களின் திருவடி தாங்கிகளும்", இசுலாமியரும் மக்கள் சோசலிசக்காரர்களும், மன்னத்தின் நரிகளும் மாதாகோவிற் கழுதைகளும் மற்றும் சிலரும் ஒருங்கு சேர்ந்த அணி அதை எதிர்க்கிறது.

தேர்தல் வந்ததும் திடுக்கிடத்தக்க பல சேதிகளும் வெளியாகியிருக்கின்றன. மூன்றாண்டுகளுக்கு முன்னர் குறைந்த அளவே இருந்த வாக்காளர் எண்ணிக்கை இப்போது திடீரென 80 இலட்சத்து 21 ஆயிரத்து 400 ஆக உயர்ந்திருக்கிறது. ஏறத்தாழப் பத்து மடங்குக்குமேல். இப்படித் திடீரென்று வாக்காளர் எண்ணிக்கை வளர்ந்ததில் அரசியற் சூதாடிகளின் விளையாடல்களும் உண்டு என்று சொன்னால் தவறில்லை. பல இலட்சம் இளைஞர்களுக்கு இந்த ஆண்டுகளில்தான் வயதுவந்து வாக்குரிமை கிடைத்திருக்கிறது என்ற பொய் வாதமும் கிளப்பப்படுகிறது. பல இலட்சம் இளைஞர்களுக்குத்திடீரென வயது வந்துவிட்டது, முயல்வானத்தில் பறந்த விந்தைக் காட்சிதான். இப்படி ஐயத்திற்குரிய வழிகளில் திடீரென வாக்காளராக்கப் பெற்றோர் எந்த வழியில் திருப்பப்படுவர் என்பது மாதவமேனோனுக்கும் சங்கரனுக்குமே வெளிச்சம் ! இத்தோடு காங்கிரசார் கொண்டிருக்கும் திடீர்க் கூட்டுறவுகளும் வேடிக்கையானவையே !

ஆத்திரத்தால் மன்னத்தையும் மாதா கோவிற்காரர்களையும் பிறரையும் அணைத்தனர்; பொதுவுடைமை அரசைக் கவிழ்த்தனர். பின்னே, தேர்தலுக்கு ஆட்களை நிறுத்துகையில் பல குழப்பங்கள் நிகழ்ந்தன. அந்நேரத்தில் மன்னத்தின் கருத்தைக் காங்கிரசார் ஏற்கவில்லை. அத்தோடு இப்போது மாதாகோவிற்காரர்களுக்குத் தக்க அளவு வாய்ப்பளிக்கவில்லை என்று அவர்கள் தனி வழி போவதாகவும் அறிகிறோம்.

கொச்சிப் பகுதிகளில் கத்தோலிக்கர்களுக்குக் காங்கிரசார் உரிய அளவு இடங்களை ஒதுக்காததால் ஏமாந்து சினம் கொண்ட கத்தோலிக்கர் தமது ஆட்களையே சுயேச்சையாளராகச் சில தொகுதிகளில் நிறுத்தியிருப்பதாக அறிகிறோம். அவரது ஆட்களை அதிகமாய் நிறுத்தாததாலோ என்னவோ, மன்னத் தேர்தல் கூட்டங்களில் ஒப்புக்குப் பேசி வருவதாகவும் ஓர் ஏடு குறிப்பிடுகிறது. இதே தகராறால் சீகண்டன் நாயரது புரட்சிகர சோசலிச இயக்கத்தினரும் அந்த அளவு ஒத்துழைக்க வில்லை; தேர்தல் கூட்டணியிலும் பங்கு கொள்ளவில்லை.

— 8 ப் பக்கம் —

பெங்களூர்க் கூத்து !

உண்மை, அன்பு, சேவை-மூன்றும் இழந்தார் -இழிவின் உள்ளத்திலே வீடுகட்டித் தானுமிருந்தார் !

ஆசியப் பேரொளியின் வருகையிருந்தாலும் சரிந்து வரும் காங்கிரசை நிமிர்த்தி வைத்துவிடமுடியாது என்பதை அண்மையில் நடந்து வரும் காங்கிரஸ் மாநாடுகள் காட்டி வருகின்றன. பெங்களூர் மாநாட்டிற்குக் காந்தியாரின் வாரிசும் வந்தார். அவரோடு காங்கிரசுப் பெருந் தலைவர்கள் மிகப் பலரும் வந்தனர். இலட்சக் கணக்கிலே மக்களது வரிப் பணமும் முதலாளிகள் பலரிடம் காங்கிரசார் பெற்ற கைக்கூலியும் செலவழிக்கப்பட்டன. என்றாலும் காய்ந்து சருகான காங்கிரசின் குரலுக்குக் கருநாடகத்தார் காது கொடுக்கவில்லை.

துணைக் கண்டமெங்கும் பரபரப்பான விளம்பரங்களைச் செய்தனர்; தொண்டரடிப்பொடியாழ்வார்கள், கூடவிருக்கும் காங்கிரசின் பெருமையைப் பறையறைந்தார்கள். வண்ணச் சுவரொட்டிகளும் வகை வகையான இனிப்புக் கட்டுரைகளும் அங்கங்கே காணப்பட்டன.

"வடக்கையும் தெற்கையும் ஒன்றாகக் காங்கிரசார் கருதுகின்றனர். தென்னகத்தில்-பெங்களூரில் கூடும் மாநாடே இதற்குப் போதுமான சான்று !" என்றும் முழங்கிக் கிழித்தனர். தில்லியைத் தட்டிக் கேட்டதால் காங்கிரசுத் தலைமைப் பதவி என்ற சிறைக்கூடத்தில் தள்ளப்பட்ட சஞ்சீவியார் அரியாசனம் ஏறும் திருக் காட்சியைக் காண வாரீர் என்று கொட்டு முழக்கவும் செய்தனர். ஆனாலும்... அங்கே ஆலை முதலைகளைக் கண்டேன்; சுரண்டல் பேர்வழிகளைக் கண்டேன்; தியாக வியாபாரிகளைப் பார்த்தேன்; பெறும் மாதக் கூலிக்கு மாரடிக்கும் சேவாதளத் தொண்டர்களைப் பார்த்தேன்; விழலுக்கிரைத்த நீராக வீணாடம்பரங்களுக்குப் பணம் வாரி யிரைக்கப்பட்டிருந்ததைப் பார்த்தேன்; ஆனால் பொதுமக்கள் திரளைத்தான் பார்க்க முடியவில்லை. பல இலட்சங்களை வாரியிறைத்து நேருவின் முன்னிலையில் ஆர்ப்பாட்டமாக நடத்தப்பெற்ற அம்மாநாட்டின் பார்வையாளராக ஐயாயிரம் பொதுமக்களே வந்தனர் என்று "டெக்கான் எரால்ட்" எழுதுகிறது. ஆனால் 16-1-60 இரவு அதே பெங்களூரில் நமது கழகத் தோழர்கள் தோழர் எஸ். வி. பதி தலைமையில் நடத்திய சாதாரண நாடகம் ஒன்றுக்கே ஐயாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் வந்து கலந்துகொண்டனர். இந்நிகழ்ச்சி ஒன்றே போதும் கருநாடகத்தில் ஆளுங் கட்சியின் செல்வாக்கை அளந்து காட்டுவதற்கு. எதிர்பார்த்த அளவுக்கு மக்கள் திரளாக வராததும், மாநாட்டால் கருநாடக மாநிலத்தில் பரபரப்பு ஏதும் ஏற்படாததும் பண்டிதருக்குச் சினத்தை மூட்டின போலும். திங்கட்கிழமை முடிய நடப்பதாக இருந்த மாநாட்டை ஞாயிறு மாலையுடன் முடித்துவிட்டு, மறுநாள் காலை எர்ணாகுளம் சென்றுவிட்டார் பண்டிதர்.

★

பெங்களூர் செல்லும் வண்டிக்காக எதிர்பார்த்து திருச்சிப் புகை வண்டி நிலையத்தில் தங்கியிருந்தோம். அப்போது அங்குள்ள சிற்றுண்டி விடுதி ஊழியர் ஒருவரிடம் "பெங்களூர்வரைத் தனி வண்டி ஏதும் இல்லையா ?" என்று கேட்டார் என்னுடன் வந்த காங்கிரசுக்காரர் ஒருவர். "கடந்த மூன்று நாட்களாக விடத்தான் செய்தனர். முதல் நாளன்று ஓரளவு கூட்டம் இருந்தது; இரண்டாம் நாள் அதுவும் குறைந்தது; மூன்றாம் நாள் வண்டியோட்டுவோரும் கார்டும் மட்டுமே சென்றனர். அதனால்தான் இன்று செல்வதாக இருந்த தனி வண்டி தவிர்க்கப்பட்டது. ஆவடி மாநாட்டிற்கு இருந்த அந்த அளவுக் கூட்டம் இதற்கில்லை; அந்தப் பரபரப்பும் இதற்கில்லை !" என்றார் அச்சிற்றுண்டி விடுதி ஊழியர். உண்மைதான் அது. பெங்களூர் சென்று பார்த்தால் பிரதிநிதிகள்கூடப் பெரும்பான்மையான அளவு வரவில்லை. வடக்கிலிருந்து வந்த பிரதிநிதிகளும் பொதுமக்களும் அந்த அளவே. "வடக்கைத் தட்டிக் கேட்ட சஞ்சீவி ரெட்டியாரைப் பழிவாங்க இந்த ஏற்பாட்டைச் செய்தனர் போலும் வடக்கத்தியார் !" என்றார் ஒரு காங்கிரசுக்காரர். இவற்றை எல்லாம் கூட்டிக் கழித்துப் பார்த்தால், இது சரியென்றே படுகிறது. அசாமில் கூடிய காங்கிரசின்போது-அதாவது நேரு காமராசருக்குக் காட்டு வாசி வேடம் போட்டுக் காட்டியபோது, காங்கிரசைப் பார்க்க வந்திருந்த மக்களைவிட, அதை ஒட்டி ஏற்பாடாகியிருந்த மிருகக் காட்சியைப் பார்க்க வந்த மக்களின் எண்ணிக்கையே அதிகம். காங்கிரசைப் பார்ப்பதிலும் அதன் நடவடிக்கைகளைக் கவனிப்பதிலும் பொதுமக்களுக்கு அத்துணை ஆர்வமில்லை. இப்படி அப்போது "இந்தியன் எக்சுபிரசு" எழுதியிருந்தது. ஆனால் இந்தக் காங்கிரசில் கண்காட்சியைப் பார்க்கக்கூடக் கூட்டமில்லை.

மாமன்னர்கள் தாம் கொலு வீற்றிருந்த நாட்களில்கூட இப்படிச் செலவுகள் மிஞ்சியதில்லை. இங்கே காங்கிரசார் நன்கொடை என்ற பெயரிலும், நுழைவுக் கட்டணம் என்ற பெயரிலும் ஈட்டிய பல லட்ச ரூபாய்களை வாரியிரைத்தனர். நுழைவுக் கட்டணங்கள் இரண்டு ரூபாயிலிருந்து இரண்டாயிரம் ரூ. வரை நிர்ணயிக்கப்பட்டிருந்தன. காங்கிரசுக் கமிட்டியாரே ரூ. 20 இலட்சங்களுக்கு மேலாகச் செலவழித்திருப்பதாக அறிகிறோம், தியாகி அவர்களின் கருத்துப்படி. ஆனால் சில காங்கிரசாருடன் தனியே பேசிக்கொண்டிருக்கையில் ரு 40 இலட்சம்வரை காங்கிரசுக் கமிட்டி செலவழித்திருப்பதாக அறிந்தேன். அவர்கள் சொன்ன தொகையில் ஓரிரு இலட்சங்கள் வேண்டுமானால் ஏற்றக் குறைவு இருக்கலாம்.

இத்தோடு நிற்கவில்லை செலவினம்; காங்கிரசுக் கமிட்டியார் செலவழித்தது போக, தில்லியரசினரும் மாநில அரசினரும் பல்வேறு வழிகளில் பல இலட்சங்களை வாரி இரைத்திருக்கின்றனர், பெங்களூர் நகர வளர்ச்சிக் குழுவினர் (C. I. T. Board) மட்டும் ரு 15 இலட்சத்துக்குமேல் செலவிட்டிருக்கின்றனர். பெங்களூர் வாசிகள் ஓய்வு பெறுவதற்கான இளமரக்காக்கள் நிறைந்ததாய் நகரின் வட பகுதியில் பல ஏக்கர் பரப்பில் இருந்த அரண்மனைப் பழத் தோட்டத்தை அழித்து சதாசிவநகர் அமைக்கப்பட்டிருக்கிறது. இங்கிருந்த மரங்களையும் காய்கறிச் செடிகளையும் வெட்டி அழித்து, தரையைச் சமப்படுத்தினர். அங்கு வரும் பிரதிநிதிகள் தங்குவதற்கும் மாநாட்டு அரங்குகள் அமைப்பதற்கும் பல கட்டடங்கள் எழுப்பப்பட்டன. புதிய பாதைகள் போடப்பட்டன.

நகரில் வேறு பல பகுதிகள் இருந்தும் அவற்றைத் தேர்ந்தெடுக்காது, இவர்களின் சில நாள் கோலாகலத்திற்கு ஒரு பழத் தோட்டம் பாழாக்கப்பட்டிருக்கிறது; அப்படிப் பாழாக்குவதற்கு பொதுமக்களின் பணம் 15 இலட்சம் வேறு வீணடிக்கப்பட்டிருக்கிறது. காங்கிரசு மாநாட்டுப் பந்தலை எந்த இடத்திலும் இரண்டு மூன்று மாத முயற்சிகளில் அமைத்துவிடலாம். ஆனால் அப்படி ஒரு பழத் தோட்டத்தை-நகர வாசிகள் வந்து ஓய்வுபெறுவதற்கான ஒரு எழில் தோட்டத்தை நீங்கள் மறுபடியும் சமைக்க முடியுமா ? முயற்சி எடுத்துக்கொண்டாலும் அப்படி ஒரு தோட்டத்தை உருவாக்க இன்னும் பத்தாண்டுகள் ஆனாலும் உங்களால் முடியுமா ? புதிதாகக் கொடுக்கத்தான் திறனில்லை; இருப்பதையாகிலும் கெடுக்காதிருக்கக்கூடாதா ?

★

காங்கிரசிற்குப் பிரமாதமான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். புதுப் புகைவண்டி நிலையத்தையும் அமைத்திருந்தனர். பெங்களூர்ப் புகைவண்டி நிலையங்களில் சேவாதளத் தொண்டர்கள் காத்திருந்தனர், வழி காட்டி அழைத்துச் செல்ல. காங்கிரசுப் பந்தலில் அஞ்சல் - தந்தி நிலையங்கள் திறக்கப்பட்டிருந்தன. பாதைகளை ஒரு வழிப் போக்குவரத்தாக அமைத்து ஏற்பாடு செய்து வைத்தனர். அவ்வழிகளில் சைக்கிள்களை விட மறுத்தனர், காவல் துறையினர். "போக்குவரத்து நெருக்கடியைக் குறைக்கத்தான் இந்த ஏற்பாடுகள் !" என்று வேறு காரணம் காட்டினர், அன்னார்.

திரளாக வரப்போகின்ற பிரதிநிதிகளுக்கும் பார்வையாளர்களுக்கும் சோறு பொங்கிப் போட 100 டன் அரிசிக்குமேல் வாங்கி வைத்தனராம் உணவுக்குழுவினர். மாநில அரசுகளும் தில்லி அரசும் பொருட்காட்சியில் தமது காட்சி நிலையங்களைத் திறந்து வைத்ததின் மூலம் காங்கிரசுக் கட்சிக்கு ஐந்து இலட்சங்களுக்கு மேலாகக் கட்டணமாகச் செலுத்தியிருக்கின்றன. அரசாங்கமும் பணமுதலைகளும் இலட்சக் கணக்கில்செலவழித்தும், நடந்தது என்ன தெரியுமா ?

அரசினரின் பணமும் கட்சியினரின் பணமுமாக 40 இலட்சத்துக்கு மேல் செலவழிக்கப்பட்டு எடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்ட விழாவுக்கு, வருகை தந்த பார்வையாளர்கள் எத்தனை பேர் தெரியுமா ?

"**சதாசிவ நகரில் அவலக் காட்சி!**" என்று தலைப்பிட்டுக் குத்திக் காட்டி எழுதும் "**டெக்கான் எரால்ட்**" தருகிறது, 5000 பேர் தான் வருகை தந்திருந்தனரென. நான் பார்த்தமட்டில் இதுகூடச் சற்று அதிகம் என்றுதான் படுகிறது. நேரு மேடையில் தோன்றியதும் கூட்டத்தாரிடையே சிறிது பரபரப்பு எழுந்ததென்றாலும், அதுகூட நீடித்து நிற்கவில்லை. தன்னைப் பார்க்கக்கூடக் கூட்டம் கூடவில்லையே என அந்தக் கதாநாயகர் வருத்தப்பட்டிருந்தாலும் வியப்பதற்கில்லை ! எண்ணற்ற மக்கள் நெருக்கியடித்துக்கொண்டு வருவர் என்று ஏற்பாடு செய்யப்பட்ட தனிப் புகை வண்டிகள் காலியாகவே வந்து சேர்ந்தன. வருவோர்க்குப் படைக்க வாங்கி வைத்த உணவுப் பொருள்களில் பத்தில் ஒரு பகுதிகூடச் செலவழியவில்லையாம் ! வண்டிகள் எதுவும் பொத்துக்கொண்டு வராததால், புதிதாகச் செய்யப்பட்ட போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன ! மொத்தம் வந்தோரெல்லாம் 5000 பேரே ! அவர்களும் அமைதியோடிராது அங்குமிங்கும் நடமாடி ஊர் வம்படித்திருக்கின்றனர் ! இதைவிட வேடிக்கை இத்துணைச் செலவில் நடைப்பெற்ற இந்த மாநாட்டின் சாதனை மூன்று தீர்மானங்களை நிறைவேற்றியதுதான். செயற்குழுவுக்கு இருபதுக்குமேற்பட்ட தீர்மானங்கள் பல்வேறு உறுப்பினர்களால் அனுப்பப்பட்டிருந்தும், மூன்றே மூன்று தீர்மானங்கள்தான் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களாலும் இந்த நாட்டுக்கு உருவான பயனேதுமில்லை ! இப்படி அலங்கோலமாக நடந்தேறிய கூத்து திட்டமிடப்பட்டதற்கு ஒரு நாளுக்கு முன்னதாகவே முடிவடைந்துவிட்டது ! நேரு இருந்தாலும் ஓரளவாகிலும் கூட்டம் இருக்கும். ஆனால் நேரு 18-1-60 அன்று எர்ணாகுளம் செல்ல வேண்டியிருந்ததால், மாநாடு, திட்டமிட்டதற்கு ஒரு நாள் முன்னதாகவே முடிந்துவிட்டது; அதாவது முடிக்கப்பட்டுவிட்டது !

★

இது நிறைவேற்றிய தீர்மானங்களினால் நாட்டுமக்களுக்கான நல்வழி தெரிகிறதா ? அடுத்த இதழில் பார்ப்போம்.

—நமது நிருபர்.

பிறப்பு.

சேலம் மாவட்டம் - காரிமங்கலத்தைச் சேர்ந்த "தென்றல்" விற்பனையாளர் தோழர் கா. பெ. நாதன் அவர்கள் துணைவியார் மீனாட்சி அம்மையார் கடந்த 18-1-'60 அன்று ஓர் ஆண் மகவுக்குத் தாயானார்கள். இதன் நினைவாகத் "தென்ற"லுக்கு ரூ. 1 அன்பளிப்பு அளித்துள்ளார், தோழர் கா. பெ. நாதன்.

—பொறுப்பாளர்.



[மலரில் நூறு ஐயவினுக்களுக்குப் பதிலளிக்கத் திட்டமிட்டிருந்தோம். ஆனல் இடமின்மையால் மலரில் 54 விஞக்களுக்கு மட்டுமே விடையிறுக்கப்பட்டிருந்தது. மீதியுள்ள விஞக்களுக்கான விடைகளேக் கிழமை இதழ்களில் வெளியிடுகிரும். நண்பர்கள் பொறுத்தருள்க.

கீழ் வரும் விடைகள் பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையார் அவர்களின் கருத்துக்கள்.]

தெ. இராதாமணுளன்,
திருவில்லிபுத்தூர்.

திருமண நிகழ்ச்சிகளில் ஐயர் வருவதும், ஆகமம் வளர்ப்பதும், அக்கினியை வலம் வருவதும், அருந்ததியை நினைத்தலும் போன்ற குறைகள் அறிவிற்கேற்பதான செயலா? இல்லையா? அப்படி நடக்கும் திருமணங்கள் அறிவுக்கு ஒவ்வாத செயல் எனில்,

"வானத்துச் சாலிஒரு மீன்
தகையாளேக் கோவலன்,
மாமுது பார்ப்பான்
மறைவழி காட்டிட
தீவலம் செய்வது காண்பார்
கண் நோன்பு என்னே."
(சிலப். மங்கலவாழ்த்து)

என்று இளங்கோவடிகள் கோவலன் கண்ணகி திருமணத்தின்போது மேற்படி வரிகளால் பார்ப்பனன் திருமணத்திற்கு வந்ததையும், வேதம் ஓதியதையும், அக்கினியை வலம் வருவதையும், அருந்ததியை நினைப்பூட்டியதையும் அன்றே பாடியுள்ளாரே. இதைப்பற்றித் தங்கள் கருத்து என்ன? 'அன்றுள்ளத் தமிழர்கள்' திருமண முறையை இன்று மாற்றியமைக்கக் காரணம் என்ன?

'மாமுதுபார்ப்பான் மறைவழி காட்டிட' என்ற ஒரு வரியை வைத்துக் கொண்டு அதற்குள் வினு எழுப்பியவர் தம் சொந்தக் கற்பனையால் வைதிகத் திருமணமே அது என்று முடிவுகட்டிக்கொண்டு அன்றுள்ள தமிழர் திருமண முறையை இன்று ஒரு தமிழ்ப் பிழை ('அன்றுள்ளத் தமிழர்') சேர்த்துக் கேட்டிருக்கிருர்.

'பார்ப்பான்' என்று சிலப்பதிகாரம் கூறுவது இன்றைய பிராமணன் என்று கேள்வி கேட்பவர் உறுதியாகக் கொணடுள்ளார் என்று தோன்றுகிறது. அது உண்மையானல் பண்டை நூல்களில் கோவலச் செட்டியார், மாடல ஐயங்கார, தாமோதர முதலியார், புகழேந்தி நாயுடு முதலிய பெயர்கள் இருக்க வேண்டாமா?

சாதியே 16-ம் நூற்ருண்டுக்குப் பின் நம் பாட்டன் முப்பாட்டன் காலத்திலிருந்து புதிதாக ஏற்பட்ட ஒரு புதுமைதான். வைதிகத் திருமணமும் அப்படியே. ஆனல் அதற்குமுன் இன்றையக்குருக்கள், பண்டாரங்கள் போன்ற புரோகிதரும் இருந்தனர். பல குடும்பங்களிலும் முதியவர் அறிவுப்பண்புடையராயிருந்து தம் உறவினரிடையே 'ஐயர்', 'ஐயா', 'அடி'களாக வினைமுறையாற்றினர். பரம்பரையாக இந்நிலேயடைந்த ஊர்க் குடும்பங்களும் உண்டு. பண்டை நூல்கள் 'பார்ப்பார்' என்றது இத் தொழில், சமயத் தலைமையடிப்படையாகவே யன்றி இன்றுபோல் பிறப்படிப்டையான, தொழில், சமயம் ஆகியவற்றின் தொடர்பு சிறிதும் இல்லாத ஓர் 'இன'த்தை அல்ல.

உலகில் முதல் முதல் 'மறை', 'வேதம்' என்ற சிறப்புப் பெயர்களுக்கு இலக்காயிருந்த ஏடு திருக்குறள்தான. கடைச்சங்க காலத்திலிருந்துதான் இன்றுவரை பலர்—கேள்வி கேட்பவர் உட்பட—அதை ஓர் இலக்கிய ஏடாகக் கருதியுள்ளனர். அதை ஏடாகக் கருதிய பின்னும் அதன் பழைய வேதப் பொருளறிந்து பின்பற்றிய தமிழ்ப் பார்ப்பார் இருந்தனர். பிற புத்த, சமண, ஆசீவக, சாங்கிய முதலிய சமயப் புரோகிதர்களும் ஆரியப் புரோகிதர்களும் (பிராமணரல்ல, பிராமணரிடையே இன்று உபாத்தியாயர் என்றழைக்கப்படும் பிராமணப் புரோகிதர்கள்) ஒருங்கே பார்ப்பார் எனப்பட்டனர்.

எரியோம்புதல் (தீவலம் வருதல்) ஆரியப் புரோகிதருக்குமட்டுமல்ல; சைவர், வைணவர், சமணர், பார்சிகள் ஆகிய பலதிறப் புரோகிதர்களுக்கும் உரிய பண்பே. தமிழர் வேதம் நான்கானுலும் அது கூறும் பொருள் மூன்றுதலால், அது நால் வேதம் என்றும் மூவேதம் அல்லது முப்பால் என்றும் பெயர் பெறும். தமிழ்ப் பார்ப்பார் முப்பால் வடிவாக முத்தீயும், முத்தமிழ்ச் சின்னமாக முப்புரி நூலும் அணிந்தது கண்டே ஆரியரும் பிறரும் அதைப் பின்பற்றினர். மூல ஆரியர் பாரசீகம் வந்தபின்னரே அங்குள்ள திராவிட நாகரிக மக்களிடமிருந்து 'ஆரியர்' என்ற பெயரையும் முத்தீ வழக்கையும் மேற்கொண்டனர். இந்தியாவுக்குள் நுழைந்த பின்னரே நூல் நூற்புக் கலையையும் முப்புரி நூலையும் கற்றுக்கொண்டனர்.

'மாமுது பார்ப்பான் மறைவழி' சமணர் வழக்கையோ, ஆரியர் வழக்கையோ தமிழர் வழக்கையோ தான் காட்டும். கண்ணகி ஆரியர் மரபு எதிர்த்து, ஆனல் வள்ளுவ மரபு பின்பற்றி 'தெய்வம்தொழுதல் தமிழர் மரபன்று' என்று பிறபட மறுத்தலும் இதை வலியுறுத்தும். கண்ணகி வைதிகத் திருமணம் செய்த நங்கையல்லர்.

'சாலி ஒரு மீன் என்பது வடமீனே —அருந்ததி நட்சத்திரத்தையன்று. வடமீன் தகையாள் என்று பிற இடத்திலும் வருகிறது. சாலி என்றவுடனேயே ஆரிய வைதிகப்பற்று ஆவலுடன் அருந்ததி மீனுக்கும், அதிலிருந்து அருந்ததி கதைக்கும், அதிலிருந்து மூட வைதிகத் திருமண ஆதரவுக்கும் பழமைப் போர்வையில் மடமைக்கும் குதித்துவிடுவது காண வேறு நாட்டு அறிவுடையோர் நகைக்கவே செய்வர்.

வடமீன் உவமை அழகைக் கேள்வி கேட்பவர் காணுமல் புராண மடமைக் கதை தடுத்து விட்டது. வானத்தின் ஒளிக் கோளங்கள் யாவும் கிழக்கில் எழுந்து வான கோளத்தைச் சுற்றி மீண்டும் மறையும், வலமிருந்து இடமாக அவை மாறுபடும். ஆனல் வடமீன் என்றும் ஒரே திசையில் (வடக்கே) வானின் ஒரே பகுதியில் இருக்கும். அடி வானிலிருந்து பத்துப் பாகை (10 டிகிரி) மேலே இரவு முழுவதும் அதைக் காணலாம்.

கற்புடை மங்கையர் மன உறுதிக்கு வடமீனைத் தமிழ் ஏடுகள உவமை காட்டியதன் நுட்பம் இது—ஆபாச அருந்ததி கதையன்று. ஆரிய வைதிகம் வானூலறியாது, அறிவார்ந்த கலேப் பண்பறியாது—அபத்தக் கதைகளேயே மக்களிடை பரப்ப அறியும்!

★

பெ. மு. அர்த்தநாரி, நாமக்கல்.

மலேயாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகள் தமிழ் மொழியுடன் ஒன்றியிருந்தாலும் ஒவ்வொரு மொழிகளும் தமிழிலிருந்து எத்தனை ஆண்டுகளுக்குமுன் தனித்தனியே பிரிவுற்றன? கொண்டன? பிரியுமுன் அவ்வப் பகுதித் தமிழ்மொழி வழக்குகள் (கருந்தமிழ் போன்று) என்ன என்னபெயருடன் அழைக்கப்பட்டன?

இலக்கிய மொழியாக மலேயாளம் தமிழிலிருந்து பிரியத் தொடங்கிய காலம் கி. பி. 9-ம் நூற்ருண்டு. முற்றிலும் பிரிவுற்ற காலம் 16-ம் நூற்ருண்டு என்னலாம்.

இலக்கியம் பிரிவுற்ற காலம் தான் இது. அதற்குமுன் இன்றைய தஞ்சை திருநெல்வேலித் தமிழ் வழக்குகள் போன்ற திசைவழக்குகளாக எல்லேயற்ற பழங்காலத் தொடக்கத்திலிருந்து நிலவியிருத்தல் வேண்டும்.

கன்னடம் கி. பி. 10-ம் நூற்ருண்டிலிருந்தும் (உத்தம சோழன் காலத்திலிருந்தும்) தெலுங்கு கி. பி. 12-ம் நூற்ருண்டிலிருந்தும் (கம்பர் காலத்திலிருந்தும்) தனி இலக்கிய மொழியாயின. கடைச்சங்க காலங்களில் (கி. பி. 2-ம் நூற்ருண்டில்) தமிழும் மலேயாளமும் சேர்ந்து இலக்கியமுடைய தமிழ் என்ற ஒரே தென் திராவிட மொழியாக இருந்தது. தெலுங்கும் கன்னடமும் இரு மொழிகளாகவில்லே. 'வடுகு' என்று தமிழராலும் 'ஆந்திரம்' என்று வடவராலும் அழைக்கப்பட்ட ஒரே வட திராவிட மொழியாகத்தான் இருந்தது. அது இலக்கிய மொழியல்ல. ஆயினும் முற்றிலும் திசை வழக்காகவும் நிலவாமல் பின்னுளில் 'கொடுந் தமிழ்' என்று அழைக்கப்பட்ட நிலேயில் இருந்தது.

திராவிட மொழி என்று பிரிந்தது என்று இன்று நாம் திட்ட வட்டமாகக் கூறமுடியாது. ஏனெனில் ஐந்து திராவிட மொழி ஒப்புமையாராய்ச்சியே இன்று நடத்தப்படவில்லே—நடத்தப்படும் வாய்ப்புக் கூட அரசாங்கத்திலோ, பல்கலேக் கழகங்களிலோ, மக்களிடையிலோ இன்னும் ஏற்படவில்லே. அத்தகைய ஒரு தேசியத்தை இனித்தான் ஏற்படுத்த வேண்டும், அதன் கனவுதான் இன்று தொடங்கியிருக்கிறது.

இதற்கு ஐந்து திராவிட மொழி ஒப்புமையாராய்ச்சி போதாது—'பண்படாதன' என்று இன்று கருதப்படும் வட திசைத் திராவிட மொழிகள் ஆராய்ச்சியும் பிற உலக மொழி ஒப்புமை ஆராய்ச்சிகளும்கூடத் தமிழ்த் தேசியத்தில் அக்கறை உடையவர்களால் செய்யப்பட வேண்டும்.

அந்தக் காலத்தை மொழியியல் அடிப்படையில் சுட்டும் ஒருகூறினை மட்டும் இங்கே சாடையாகக் குறிப்பிடலாம். பண்டைத் திராவிடத்தில் 'அ-ஆ' உயிர்களில் முடிந்த சொற்கள் தமிழில் பெரும்பாலும் ஐ ஆகி உள்ளன. மற்றத் திராவிட மொழிகளில் மாருமல் 'அ' ஆகவோ, 'ஆ' ஆகவோ உள்ளன. தமிழில் இம்மாறுதல் ஏற்படுவதற்குமுன்பே சமஸ்கிருதம் அல்லது ஆரியம் தமிழுடன் தொடர்பு கொண்டு விட்டது. ஏனெனில் தமிழ் ஐ-சமஸ்கிருத 'ஆ' ஆகவும், சமஸ்கிருத 'ஆ' தமிழ் ஐ ஆகவும் இதனுல் மாறுதலடைந்தது. இதனே நோக்க, ஆரியம் தமிழுடன் தொடர்பு கொண்ட காலம் எதுவோ, அதுவே திராவிடம் பல மொழிகளாகப் பிரியத் தொடங்கிய காலம் என்னலாம்.

மோகெஞ்சதரோ மொழி தமிழையும் பழங் கன்னடத்தையும் ஒத்ததெனத் திருத்தந்தை ஹீராஸ் கருதுகிருர். மொகெஞ்சதரோக் காலம் கி. மு. 2500. திராவிடம் பிரியத் தொடங்கிய காலம் கி. மு. 1000 ஆகலாம்.

(இன்னும் வரும்.)

நாடகம்:

பாரீஸ் மைனர்.

மயிலே மதிசூடி மன்றத்தினர், பார்க் பேர் பொருட்காட்சியில் பாரீஸ் மைனர் என்ற நாடகம் நடத்தினர்.

எல்லேயற்ற காமவெறி கொண்ட மனிதர்களால், சமுதாயம் என்னென்ன தீங்குகளுக்குள்ளாகிறது என்பதை விளக்கிக் கூறுவதே இந்தக் கதை. ஆனல் கதையை மூன்று தலைமுறைகளுக்கு இழுத்துச் செல்ல வேண்டியதில்லே.

நாடகத்தில் பங்கு பெற்ற நடிகர்கள் அத்தனைபேரும் நல்ல முறையில் நடித்தனர். குறிப்பாகப் பாரீஸ் மைனராக நடித்த எஸ். சந்திரசேகரன் தெளிவாக நடித்தார். நடிகைகளில் மல்லிகாவாக நடித்த சக்தி இராசலெட்சுமி நல்ல முறையில் நடனமாடியும், வசனம் பேசியும் தனது புகழை நிலேநாட்டிக் கொண்டார்.



பாரீஸ் மைனராக நடித்த சந்திரசேகரன்.

சிலை மாண்டது

அவன் ஒரு கைதேர்ந்த சிற்பி!

அவன் படைப்பைக் கண்ட பலரும் பலவிதமாக அவனைப் பாராட்டினர்.

"கல்லைக்கூட கலையால் கதை சொல்ல வைக்கிறானே! ஒவ்வொரு அங்கத்திலும் உயிர் ததும்புகிறது, கால வெள்ளத்தால் அழியாதது. பாதுகாக்க வேண்டிய தங்கப் பெட்டகம்" என்றும்; 'இல்லை இவைகள் ஆலயத்திலிருக்க வேண்டியவை" என்றும்கூடப் பாராட்டினர்.

ஆம்! ஆதியப்பன் உளிமுனை பட்ட கல்கள் அத்தனையும் உயிர்ச் சிலைகளாயின அவன் படைப்புக்கள் அத்தனையும் புதுமையானவை! சிற்பக்கலை மேதைகள்கூட ஆதியப்பனைப் பாராட்டினார்கள். அவர்களால் செய்ய முடியாதவைகளையெல்லாம், ஆதியப்பன் அழகாகச் செய்து முடித்தான்.

பாப்பையாவோ குரங்கு மனிதன். ஆனால் ஆதியப்பன் கைபட்டால் ஆணழகனாகிவிடுவான் ஆனாலும் அந்தக் குரங்கு மனிதர்கள் இந்த நாட்களுக்கு வருவதில்லை. அவர்களைப்பற்றி இவனும் கவலைப்படுவதில்லை.

ஆதியப்பனின் தந்தையும் ஒரு சிற்பக்கலைஞர், அவரிடம் அவன் முறையாகச் சிற்பக்கலை பயின்றான். நன்கு தேர்ச்சியடைந்தான். கண்டவர் வியக்கும் வண்ணம் அவன் பல அற்புதமான சிலைகளைச் செதுக்கினான். அவன் புகழ் பரவுவதற்குள் தந்தை இறந்துவிட்டார்.

அவன் சிற்பக்கலையில் முன்னோர்கள் பின்பற்றிய வழியே செல்ல விரும்பவில்லை. புதுப்புது முறைகளைக் கையாள விரும்பினான். புதுமை புதுமையெனத் தேடியலைந்தான் அவனது படைப்புகள் அத்தனையும் புதுமையாக இருந்தன.

ஊரார் உறவினர், வந்தோர் போவோர் அத்தனை பேருமே அவனது கலைத் திறனைக் கண்டு போற்றி மகிழ்ந்தனர். புகழ் மாலை சூட்டினர். ஆதியப்பனின் தாய், மகனின் புகழ் பரவுவதைக் கண்டு பூரித்துப் பெருமையடைந்தாள். தன் செல்வத் திருமகனுக்குத் திருமணம் செய்ய வேண்டுமென எண்ணினாள்.

நாளைக்கு ஆதியப்பனுக்குத் திருமணம்.

"ஆதியப்பா, ஆதியப்பா, தெரியுமா சேதி...?"

"சொன்னால் தெரிந்துகொள்ளுவேன்!"

"பூரிப்பான சேதி!"

"போதுமடா நீட்டோலை!"

"அரசர் அம்பலவாணர் சிற்பக்கலைப் போட்டியொன்று நடத்தப் போவதாக அறிவித்திருக்கிறார். முதற் பரிசு ஆயிரம் கழஞ்சுப் பொன்!"

"நடத்தட்டுமே, நமக்கென்ன?"

"நீ கலந்துகொள்ளவில்லையா?"

"ஆடம்பரம் என் கலைக்குத் தேவையில்லை நண்பா; அதை நான் விரும்பவுமில்லை!"

"நம் கனவில்கூடக் காணமுடியாத பொன்...!"

"நமக்குத்தான் கிடைக்குமென்பது என்ன உறுதி?"

"உறுதியாக நம்புகிறேன்; பரிசு நமக்குத்தான்!"

"வீண் கனவு"

"கனவும் நனவானதுண்டு"

"கலந்துகொள்கிறேன், நண்பா!"

அவன் போய்விட்டான். ஆதியப்பன் கற்பனையிலாழ்ந்தான். புதுமை புதுமை என்று அவன் கற்பனைக் குதிரை ஆடி ஆடி அலைந்தது

★

வண்ண முகத்தழகி பூவாத்தாள் ஆதியப்பனின் மனைவியானாள்.

முதலிரவு. சீனத்துப் பட்டு விரித்த கட்டிலிலே ஆதியப்பன் அமர்ந்திருந்தான். அகிற்புகையும், மல்லிகையின் நறுமணமும் மணந்து கொண்டிருந்தன. அவன் மனம் போட்டியில் கலந்து கொள்ளப் புதுமையை நாடிக் கொண்டிருந்தது.

கையில் பாலோடு பூவாத்தாளை உள்ளே தள்ளிக் கதவைத் தாளிட்டனர். வெண்கலச் சிரிப்பொலி தேய்ந்து மறைந்தது. அவள் நடந்தாள்; நின்றாள்! ஆதியப்பன் அருகில் நின்ற பூவாத்தாளை ஆவலோடு பார்த்தான் அவன். கண்கள் அகல விரிந்தன. புதுமை விரும்பிய உள்ளத்தில் புத்துணர்வு ஊறியது. அமர வைத்தான்; விளக்கொளியைத் தூண்டிவிட்டான். அவன் செய்கை அவளுக்குப் புதிராக இருந்தது. அவனோ அவளைத் தலையிலிருந்து கால்வரை, ஒவ்வொரு அங்கத்தையும், சுவைத்தான்; அளந்தான்.

அவன் தேடியலைந்த புதுமை அவனுக்குக் கிடைத்துவிட்டது. இனியவனை வெல்ல எவராலும் முடியாது; அவனுக்குத்தான் பரிசு!

அன்று இரவு முழுவதும் அவன், அவளின் பொன்னிற உடலை, விழித்த விழி மூடாது பார்த்துக்கொண்டேயிருந்தான்.

பொழுது விடிந்தது. அவன் எழுந்து சிற்பக்கூடம் சென்றான். இரவில் கண்டு களித்ததை நினைவில் நிறுத்தி மகிழ்ந்தான். அவன் எடுத்த உளியும் சுத்தியும் கல்லில் விளையாடின. மனக்கருவில் நின்றது, உருவாகத் தொடங்கிற்று.

★

பொழுது மறைந்தது; இருள் சூழ்ந்தது. அவள் அறைக்குள் வந்தாள். அவன் சிந்தனையிலிருந்தான். நாழிகை நகர்ந்துகொண்டிருந்தது. அவள் படுத்துவிட்டாள். அவன் அசையாத பதுமையென அமர்ந்திருந்தான்.

இரண்டாவது சாமம். அரண்மனை மணி அடித்து ஓய்ந்தது. அவள் படுக்கையில் புரண்டு படுத்தாள். தன்னை மறந்து அவள் துயிலின் மடியிற்கிடந்தாள். அவனது விழிகள், அவள் படுக்கையில் துவண்டுகிடந்த நிலையை நோக்கின. செம்பருத்தி மலரிதழின் ஓரத்தில் புன்னகையின் நெளிவு. அவளின் மேலாடை அலங்கோலமாகச் சரிந்துகிடந்தது. விளக்கின் திரியைத் தூண்டிவிட்டான்; ஒளி மிகுந்தது. அவன் அவளின் அங்க அசைவுகளைக் கூர்மையாகக் கவனித்தான். விளக்கொளியில் பூவாத்தாளின் பொன்னிற மேனி மின்னியது.

அவள் விழித்துக் கொண்டாள். சரிந்து கிடக்கும் மேலாடையைச்சரி செய்து கொண்டு எழுந்தாள். அவன் அவளையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனைப் பற்றி அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. "ஏன் இவர் இப்படியே பார்த்துக் கொண்டிருக்கிறார்? களிப்புற்றிருக்க வேண்டிய நேரத்தில் வெறி கொண்டவர் போலிருக்கிறாரே ஏன்? மரமரத்துப் போன உள்ளத்தைப் போன்று உணர்ச்சியில்லாமலிருக்கிறாரே ஏன்? ஒரு வேளை ....?" இப்படி எண்ணிக் குழம்பியபடி மறுபடியும் படுக்கையில் சாய்ந்தாள் அவள். ஆதியப்பன் முன்போலவே இருந்தான்.

பொழுது விடிந்தது. இரவில் கண்களால் கணித்தவற்றை பகலில் கையால் உருவாக்கிப் பணியைத் தொடர்ந்தான்.

நாட்கள் நகர்ந்தன. அவனுக்கு வெறி தணியவில்லை. அவளுக்கோ அவனைப் புரிந்துகொள்ளவே முடியவில்லை.

அவன் கணித்த அளவுகள் ஒரு சிலையாக உருவாகி முடிந்தன.

ஒருநாள்...

"அன்பே, நாளை நடைபெறும் கலை விழாவில், எனது கைத்திறனில் உருவான சிலையொன்றை வைக்கப் போகிறன்! நீயும் தாயாரும் அங்கே வந்து பாருங்கள்!"

"அவ்வளவு அழகான சிலையா?"

"சிலையல்ல அது; என்னோடு பேசும் கலை! நான் உருவாக்கியவற்றிலேயே உயர்ந்தது! நாளைக் காலை கலை விழாவில் வந்து பார்!"

"இப்போது பார்த்தால்...?"

"சுவை குறைந்துவிடும்! மூன்று நாட்களாக இரவில் எதற்காக நான் விழித்திருந்தேன் என்பதை கலை விழாவில் அறிவாய் நீ!"

"ஆவலைத் தூண்டுகிறீர்களே!"

"இன்று இரவுவரை பொறுத்திரு. விடிந்தவுடன் விழாவிலே பார்க்கலாம்!"

கலைக்கூடம் நோக்கி ஒரே மக்கள் வெள்ளம். பூவாத்தாள் தன் மாமியாரை அழைத்துக்கொண்டு ஆவலோடு கலை விழாவைக் காணச் சென்றாள்.

ஆங்காங்கே சிற்பிகளின் அலங்காரங்கள்! கண்களுக்கு விருந்தான பலவித சிலைகளையும், பூவாத்தாள் கண்டு களித்துக்கொண்டு வந்தாள்.

"இளமொழி, ஆதியப்பனின் கைத்திறனில் உருவான அந்தச் சிலையைப் பார்த்தாயா...?"

தன் கணவனைப் பற்றிப் பேசுவதைக் கேட்ட அவள் பெருமையால் பூரித்தாள். மேலும் அப்பேச்சைக் கவனித்தாள். செவியைத் திருப்பினாள்.

"கதை சொல்லும் கண்கள்; வெறியூட்டும் கன்னங்கள்; அப்பப்பா, என்ன அழகு! ஆதியப்பனின் கற்பனையில் உருவான அந்தக் கட்டழகி உயிரோடிருந்தால்.....! அவளைத்தான் நான் காதலிப்பேன்! ஒருநாளேனும் அவளை என் பள்ளியறைப் பதுமையாக்குவேன்......!" அவன் இன்னும் ஏதேதோ கூறிக் கொண்டிருந்தான். பூவாத்தாள் தன் மாமியாரை அழைத்துக்கொண்டு, அந்தச் சிலையிருக்கும் இடத்தை நோக்கி விரைந்தாள்.

எதிரே சிலை நிமிர்ந்து பார்த்தாள். அவளே சிலையாக நிற்பதுபோன்ற ஒரு பிரமை! ஆம்; அவளின் மறுபதிப்புத்தான் அந்தச் சிலை! முள் நிறைந்த சவுக்கினால் தன் பட்டுடலில் அடிப்பதைப்போன்ற ஒருஉணர்ச்சி! அவமானத்தால் அவள் உடல் குறுகியது. "ஒரு நாளேனும் அவளை என் பள்ளியறைப் பதுமையாக்குவேன்...!" வழியில் கேட்ட இவ்வார்த்தைகளை நினைத்தாள். அந்த வார்த்தைகள் தலையில் ஆயிரம் சம்மட்டிகள்போல் தாக்கின.

"ஐயோ! கண்டவர் காமுறும் காட்சிப் பொருளா நான்?" -பூவாத்தாளின் பிஞ்சு உள்ளம் வேதனையால் ஓலமிட்டது. வெறி கொண்டவளானாள். தன் மாமியார் அழைப்பதைக்கூடக் கேளாமல் ஓடி மறைந்தாள்.

★

ஆதியப்பன் தான் பெற்ற பரிசை, தான் அடைந்த கோதையிடம் காட்டி மகிழ ஓடோடி வந்து வீட்டிற்குள் நுழைந்தான்...

அங்கே அவனை வாவென்று கேட்டு வரவேற்க எவருமே இல்லை.. திட்டி சுற்றி நெற்றிக்குப் பொட்டு வைக்க அவன் துணைவியைக் காணவில்லை. அமைதி... பிணக்காட்டின் அமைதி... அவன் உள்ளே நுழைந்தான். அங்கே... அவன் கலைப்பசியைத் தணித்து வைத்த தோகை மயில், தன் கண்வன் பரிசு பெற்று வரும் இந்நாளில் தன் பிணத்தையே அவனுக்குப் பரிசாகக் கிடத்திக் கிடந்தாள்.

ஆம்; அவள் பிணமானாள்! கலையைக் கற்றறிந்த ஆதியப்பன், ஏனோ உலகைக் கற்றறியவில்லை...!

—இராம. கண்ணப்பன்.

இடமில்லை, இதனில். எனவே **கண்ணீர்** அடுத்த இதழில் பெருக்கெடுக்கும். அதே இதழில் **என்தாயும்** சந்திப்பாள்.

சுழலும் உணர்வு

"அருணன்"

அன்புள்ள நண்பா,
'என் காதலியின் இருநூற்று எழுபத்தெட்டாவது கடிதத்திற்கு மும்முரமாகப்பதிலெழுதிக்கொண்டிருக்கும்பொழுது உன் கடிதம் வந்தது' என்று உனது கடிதத்தின் முதல்வரி சொன்னது. பெருமையான கருத்தை உள்ளடக்கியோ, அலட்சியமான எண்ணத்துடனே அது அமைக்கப்பட்டிருக்கலாம். அதற்காக நான் வருத்தப்படுவதாக நினைக்காதே! உனக்கு எத்தனையோ தொல்லை. இன்பத் தொல்லை; இளமைத் தொல்லை; காதலிக்குக் கடிதமெழுதக் காலம் காணுத்தொல்லை; அந்தத் தொல்லை நேரத்திலே இந்த நண்பனது கடிதம் உனக்கு இடையூருக இருந்திருக்கலாம். ஆற்றிலே வெள்ளம் பெருக்கெடுக்கும்பொழுது பக்கவாட்டிலே கரையை உடைத்துக்கொண்டு பெருகுகிறது. அதுபோல இளமை வயதிலே உணர்ச்சி வெள்ளம் பெருக்கெடுக்கும்போது தாய்தந்தையரைக்கூட ஒதுக்கித் தள்ளத் தோன்றுகிறது. நண்பனுன நான் அந்த சமயத்திலே உன் நினைவிலெப்படி நிற்கமுடியும்? கரையே சரியும்பொழுது கரையில் நிற்கும் தென்னைமரத்தின் கதி என்ன ஆகும்?

நன்றி!

பொங்கல் வாழ்த்துக்கள், அனுப்பிய அனைவர்க்கும் என் நன்றி.

அன்பன்,
கண்ணதாசன்.

நீ அப்படி அலட்சியமாக எழுதிவிட்டாயே என்பதற்காக நான் வருத்தப்படவில்லை. என்னை ஏமாற்றி என்னுலேயே மகிழ்ச்சி பெறும் என் எதிரிகளைக் கண்டே நான் வருந்துவதில்லையே! உன்னுடைய அந்த ஒருவரி அலட்சியத்தினுலா கவலை அடையப்போகிறேன். பின் ஏன் இவ்வளவு எழுதுகிருய் என்று கேட்கிருயா? அந்த ஒருவரி என் நெஞ்சில் பெருமூச்சை, அனல்காற்றைக் கிளப்பிவிட்டது. ஏமாற்றங்களையும், குழப்பங்களையும் எதிர்க்கமுடியாமல் நான் தவித்துக்கொண்டிருக்கும் பொழுது; உனது கடிதம் அவைகளை அதிகப்படுத்திவிட்டது. உனக்கு அவைகளை எழுதவேண்டும்போல் தோன்றிற்று; எழுதுகிறேன். அனற்காற்றை வெளியிட்டுத்தானே ஆகவேண்டும். நான் எங்கே திரும்பினுலும், எங்கு செல்ல நினைத்தாலும், அங்கே வழிமூடிக் கிடக்கிறது. நீ கொடுத்தவன். நீ எங்கு செல்ல நினைத்தாலும் அங்கே ஒருவழி உனக்காகத் திறக்கிறது. அங்கே உண்மை அன்பின் மென்மைக்கரமொன்று உன் கரத்தைப் பிடித்து அழைத்துச் செல்கிறது. இளவயதிலிருந்தே என்கூட வந்துகொண்டிருந்த நீ, அங்கேதான் என்னைப் பிரிந்து வெகுதூரம் சென்றுவிட்டாய். நீ ரீங்காரம் செய்தாய். ஒரு மலர் மலர்ந்தது. நான் ஒரு மலரைச் சுற்றி ரீங்காரம் செய்கிறேன், அது மலருமா என்பது தெரியாமல். இன்னெரு மலரோ எனக்காக மலர்ந்து வடுகிறது. எனக்கு அந்த மலரில் மனம் செல்லவில்லை. நான் மலருக்கு மலர் தாவும் சாதாரண வண்டல்லவே. மனித வண்டல்லவா? நீ உன் வேலையைப் பார்த்துக்கொண்டு போய்விட்டாய்! நான் இன்னும் பழைய வட்டத்திலே சுற்றி வருகிறேன். நீ துள்ளி விளையாடுகிருய். நான் எண்ணி நலிகிறேன்.

சிதம்பரம், உனக்குத் தெரியும் என் அத்தை மகள் சிவகாமியை; இன்று சந்தர்ப்ப வசத்தால் அவர்களுடைய வீட்டிலேயே நான் வசிக்கும்படி நிலைமை மோசம் செய்துவிட்டது. உனக்கு நான் முன்பு பல தடவை கூறியிருக்கிறேன். "இந்தப் பெண் சிவகாமி என்னைச் சுற்றிச் சுற்றி வருகிறது. பார்த்துச் சிரிக்கிறது. எனக்கு காரம் பிடிக்குமென்று சொன்னுல், அதுவும், 'ஆமாம்! எனக்கும் காரம்தான் பிடிக்கும்' என்று சொல்லுகிறது" என்று. அப்பொழுது விளையாட்டுப் பருவம். ஆண் பெண் உறவு முறை புரியாத வயது. அப்பொழுது எனக்கு அவளை 'நண்பன்போல பிடித்திருந்தது. ஆனுல் உண்மை இப்பொழுது புரிகிறது. அந்தப் பெண்ணுடன் என்னை இணைத்து எனக்கு அவளைக் கட்டி வைக்கப் போவதாக வேடிக்கையாகப் பேசுவார்கள். அதைஉண்மை என்று நம்பி அந்தப் பெண்ணும் என்னை தன் நெஞ்சில் கணவனுகப் பதித்துக்கொண்டு வளர்ந்துவிட்டது. பலூனில் வரையப்பட்ட உருவம் பலூன் ஊத ஊதப் பெரிதாவது போல காலம் வளர வளர, என் நினைவும் அவள் உள்ளத்திலே வளர்த்துகொண்டே வந்துவிட்டது. ஆனுல் அதற்கு நான் பிணையா? அதேபோலத்தானே என் நெஞ்சமும் வாடுகிறது, வேறெரு பெண்ணை நினைத்து. எனக்கு நாலைந்து அத்தைகள். அதில் எல்லோருடைய பெண்ணையும் எனக்கு இணை கூறிப் பேசும்பொழுது; என் மனம் மூத்த அத்தை பெண் வசந்தாளை விருப்பியது. அதையும் முன்பே உனக்கு நான் சொல்லியிருக்கிறேன். சிவகாமியுடன் வசந்தாளை ஒப்பிடும்பொழுது முன்னவள்தான் அடக்கமானவள், ஆழ்ந்த சிந்தனையும் அன்பும் உடையவள். அழகைப் பொறுத்தவரை இருவரும் மயிலுமில்லை; குயிலுமில்லை. வசந்தாள் குறும்புக்காரி. வெடுக் வெடுக் என்று பேசுவாள். அதிலும் அவளுக்கு என்னை மட்டம் தட்டிப் பேசுவதென்றுல் மிகவும் பிரியம். ஆனுல் நான் தலையில் குட்டினுலும் தலையைத் தடவிக்கொண்டு என்னைப் பார்த்துச் சிரிப்பவள் சிவகாமி. ஒருத்தி என் கையைப் பிடித்து இழுக்கிருள். இன்னெருத்தி நான் கை கொடுப்பேனென நம்பிக் கையை நீட்டுகிருள் முன்னவள் 'விளையாடத்தான் அழைக்கிருளா, இல்லை துணையாகவே அழைக்கிருளா?' என்பதையே நான்இன்னும் தெரிந்துகொள்ளவில்லை. ஆனுல் பின்னவள் எனக்காகத் தன் கையை நீட்டி நான் எந்தப் பாதையில் சென்ருலும் மறுக்காமல், மாருமல் வரத் துடிக்கிருள், என்பதைப் புரிந்துகொண்டுவிட்டேன். ஆனுலும், என் மனம் முன்னவள் பின்னேதான் செல்கிறது. ஏன்? நான் முட்டாளா? இல்லை கோழையா?...ஒரு வேளை நீ அப்படி நினைக்காவிட்டாலும் மற்றவர்கள் நினைக்கலாம். 'ஏதோ சின்ன வயதில், வேடிக்கை விளையாட்டாக நடந்த ஒரு நிகழ்ச்சியை மனதில் பதித்துக்கொண்டு வசந்தாளைச் சுற்றியே வாழ்க்கைக் கோட்டைக் கிழித்துக்கொண்டு வந்திருக்கிருளே! அவள் பெரியவளானதும் ஒரு முறையாவது அவளை நீ சந்தித்து, நான் உன்னை விரும்புகிறேனென்று நீ அவளிடமோ, அவள் உன்னிடமோ சொல்லியதுண்டா? வாழ்க்கை வட்டத்திற்குள் நீ அடைத்து வைத்திருக்கும் பறவை பறந்து விட்டால் உன் வாழ்க்கையில் ஒன்றுமிராது, சூன்யத்தைத் தவிர இதை நினைத்துப் பார்!" என்று நானே எனக்குள் கேட்டுக் கேட்டு அலுத்துப்பேனேன். ஒருவேளை என்னை விரும்பும் சிவகாமியை நான் விரும்பாதது போல, நான் விரும்பும் வசந்தாள் என்னை விரும்பாமலிருக்கலாம்!

"நீ விரும்புபவளை மணப்பதைவிட உன்னைக் காதலிப்பவளை மணந்துகொள்" என்று ஒருசில பெரியவர்கள்கூறுகிருர்கள். அதை நான் சிந்தித்துப் பார்க்கும்பொழுது, அந்த உண்மையை ஏற்றுக்கொண்டால் என்ன? என்ற முடிவுக்கு வருவதும் உண்டு. அந்த முடிவு என் ஐம்புலன்களையும் கசக்க வைக்கிறது. இருதயம் ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. கசப்போடு வாழ்க்கை நடத்த முடியுமா? மனவெறுப்போடு வாழ்ந்தாலும் வாழலாம். தீர வழியுண்டு. கசப்பை மாற்ற இனிப்புதான்தேவை. முதலில் சிவகாமியை மணந்துகொண்டு அந்தக் கசப்பை மாற்ற இன்னெரு பெண்ணை நாடி ஓடுவதைவிட, அந்த 'வேறெரு' பெண்ணையே கல்யாணம் செய்துகொண்டுவிடலாம். எனக்கு நீதான் ஒருவழி காண்பிக்கவேண்டும்.

நன்றி!

தாயக மெங்கிலுமிருந்து பொங்கல் வாழ்த்துக்கள் அனுப்பி மகிழ்வித்த தோழர்களுக்கு என் நன்றி.

அன்பன்,
சுப. அருணுசலம்.

மன அமைதி உள்ளவர்களால்தான் மற்றவர்களுடைய நிம்மதிக்கு வழி காண்பிக்கமுடியும். இரண்டு பேரும் குருடர்களாகச் சேர்ந்தால் நேரே பள்ளத்தில்தான் போய் விழவேண்டும். உன் நிலைமை உயர்ந்தது; மிக உயர்ந்தது. நீ யாரை விரும்பினுயோ, அவள் உனக்காக உயிரையும்விடக் காத்திருக்கிருள்.

என்னுடைய தீராத புதிருக்குக் காலம்தான் பதில் சொல்லவேண்டும். எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. நேராக வசந்தாள் இருக்கும் 'ஹாஸ்டலுக்'குச் சென்று, வசந்தாளிடம் நேருக்கு நேராக 'நீ என்னைக் காதலிக்கிறுயா இல்லையா? என்ன?...' என்று கேட்டுவிட்டால் புதிர் அவிழ்ந்துவிடுமல்லவா? புரியாமல் மன சித்திரவதைப்படுவதைவிட, வெற்றியோ? தோல்வியோ?—தெரிந்துகொள்ளது நல்லதல்லவா?

அடிபடாமல் அழுவதைவிட அடிபட்டு அழலாம். ★

எனது சிறிய தந்தையார் சிறுகூடல்பட்டி ந. வெ. இராமசாமி (செட்டியார்) அவர்கள் நாச்சியாபுரத்தில் 12-1-60 அன்று காலமானுர்கள் என்பதை அறிவிக்க வருந்துகிறேன்.

அன்பன்,
கண்ணதாசன்

பெங்களூர் சேவா ஆசிரமத்துக்கு கண்ணதாசன் ரூ. 2000 நன்கொடை

பெங்களூரில் தமிழ்ச் சிறுவர்களுக்குக் கல்வி கற்பித்துக் காத்து வரும் சேவாசிரமத்தில் 14-1-60 அன்று காலை புலவர் தண். கி. வேங்கடாசலம் தலைமையில் நடைபெற்ற பொங்கல் விழாவில் நம் ஆசிரியர் கலந்துகொண்டு உரையாற்றியதோடு அம்மாணவர்களுக்காக "விசாலாட்சி ஆச்சி நினைவு விடுதி" என்ற பெயரில் அமையவிருக்கும் உண்டுறை விடுதி நிதிக்கு ரூ. 2000 நன்கொடையளித்தார்கள்.

ஆசிரியர் பேசியதாவது :

மாருத தத்துவம்

"தத்துவம் என்பதே மாருதது தான் என்பார்கள். நமது அவைத் தலைவரவர்களும் அதையே குறிப்பிட்டார்கள். ஆனால் நான் இங்கே மாருத தத்துவம் என்று கூறியது கூறும் தலைப்போடு பேச வந்திருக்கிறேன். தலைவரவர்களோடு நான் முரண்படுவேனென்று நீங்கள் எண்ண வேண்டியதில்லை. நான் தலைவரோடும் முரண்படவில்லை; தத்துவத்தோடும் முரண்படவில்லை எதிலும் அடிப்படை, நடைமுறை என்ற இரண்டு கூறுகள் உள்ளன. அடிப்படை மாருதது; நடைமுறை மாறுவது. ஆடையில்லாத மனிதன் தனக்கொரு ஆடையைக் கண்டு பிடித்துக்கொண்டதை அடிப்படை என்று கொண்டால், அந்த ஆடைகள் விதவிதமாக மாறி வந்ததை நடைமுறையாகக் கொளவேண்டும்.

சரித்திர காலத்திலும் போர் நடந்தது. இப்போதும் போர் நடக்கிறது. போர் என்பது அடிப்படை. சரித்திர கால மனிதர்கள் வாள் தாங்கிப் போரிட்டார்கள் இன்றைய வீரர்கள் துப்பாக்கியேந்திப் போரிடுகிருர்கள். இது நடைமுறை மாற்றம். இப்படி ஆரம்பத் தத்துவம் காலங்களின் நடைமுறைக்கு ஏற்ப ஒட்டியும் விட்டும் செயல்படுவது உண்டு. எந்த ஒரு தத்துவமும் நாளாக நாளாக நடைமுறையிலே மாற்றம் காண்பதுண்டு. நானறிந்த வரையில் காலங்களாலும், ஊழிகளாலும், நாகரிக மாறுதல்களினுலும், நாகரிக மோதுதல்களினுலும, அறிவில் ஏற்பட்ட வளர்ச்சியினுலும் அல்லது வேறு எந்தக் காரணங்களினுலும் மாறவே மாருத தத்துவம் திருவள்ளுவம் ஒன்றுதான்.

அதன் உயிர்ப் பிணைப்பு இயற்கை நிகழ்ச்சிகளிலேயே ஒட்டிக்கொண்டிருப்பதால், எந்தக் காலத்திலும் அது மாறுதல் அடையாமலே இருந்து வந்திருக்கிறது. தனக்கென முரட்டுத்தனமான கொள்கைகளைச் சொல்லுகிறவர்கள் வேண்டுமானுல், இரண்டொரு இடங்களில் வள்ளுவத்தோடு முரண்படலாம். மற்றப்படி நடைமுறையிலேகூட மாருதது திருவள்ளுவம்தான். அதிசயிக்கக் கூடிய இந்த நிலை இயற்கையாக அமைந்ததா? திட்டமிட்டே வள்ளுவனுல் செய்யப்பட்டதா? - என்பது சிந்தனைக்குரியது.

உலகில் எது மாறினுலும், மாருதவை சில. அவற்றைப் பிறப்பு, படிப்பு, ஒழுக்கம், துணிவு, நட்பு, அன்பு, அரசியல், பொருள், வரவு, செலவு, காதல், கல்வி, இறப்பு என வகைப்படுத்தலாம். இவற்றின் நடைமுறைகள் வேண்டுமானுல் மாறலாமே தவிர, இவை நிகழ்ந்தே தீரக்கூடியவை என்பதில் மாற்றமில்லை. இவற்றைப்பற்றியே வள்ளுவன் பாடியதால், காலா காலங்களுக்கு மாருத தத்துவமாக வள்ளுவம் ஆகிவிட்டது. வள்ளுவன் காலத்தில் அரசர்கள் இருந்தார்கள். அமைச்சர்களும் இருந்தார்கள். இன்று அமைச்சர்கள் மட்டுமே இருக்கிருர்கள். திருக்குறளில் வள்ளுவன் அரசர்களுக்குச் சொல்வதை வெகுவாகக் குறைத்துக்கொண்டு, அமைச்சர்களுக்கே அதிகமாகச் சொல்லியிருக்கிருன். மேலும் 'அரசன்' என்று குறிப்பிடாமலேயே நிலன் ஆள்பவர் போன்ற பொதுச் சொற்களைப் போட்டுப் புத்திமதிகளைக் குறித்திருக்கிருன். பிற்காலத்தில் அரசர்கள் இருக்கமாட்டார்கள்; அமைச்சர் மட்டுமே இருப்பார்களென்பது வள்ளுவனுக்குத் தெரியுமா? அமைச்சர்கள் அல்லாத வேறு சிலரும் எதிர் காலத்தில் நிலத்தை ஆளக்கூடும் என்பதை அவன் சிந்தித்திருப்பானு? சிந்தித்தானே, இயற்கையாக விழுந்ததோ எந்தக் காலத்தில் எவன் எந்த நிலத்தை ஆண்டாலும், அவனுக்குச் சொல்வதுபோலவே குறள் அமைந்துள்ளது.

எவ்வளவுதான் நாகரிகத்தில் நாடு முதிர்ந்தாலும் அது "உறுபசியும் ஓவாப்பிணியும் செருபகையும் சேராது" இருந்தால் தானே நாடாக முடியும். காங்கிரஸ்காரனுக இருந்தாலும் கம்யூனிஸ்டாக இருந்தாலும், "தூங்காமை கல்வி துணிவுடமை, இம்மூன்றும் நீங்காமல்" பெற்றிருந்தால் தானே நிலத்தை ஆளும் தகுதியிருப்பதாகக் கருதமுடியும்?

எந்தக் காலத்திலும் யாருக்கும்,

"தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும் தீரா இடும்பைத் தரும்"—அல்லவா?

பயன் கருதிப் பொய் சொன்னுல், யாருக்கும் எந்தக் காலத்துக்கும் "பொய்மையும் வாய்மையிடத்த" தல்லவா? "ஒழுக்கம் விழுப்பம் தரும்" என்பதை எந்தக் காலம் மறுக்கும்? அப்படி விழுப்பம் தருவதால் அது "உயிரினும் ஓம்பப்படும்" என்பதை எந்த நாகரிகம் மறுக்கும்? உள்ளத்து அளவுதான் உயர்வு என்பதில் யாருக்கு மாறுபாடு உண்டு? வெள்ளத்தனைய மலர் நீட்டம் பெறுவதை இயற்கை மாற்றிக்கொள்ளும்போது தான் வள்ளுவம் மாறும். வள்ளுவன் சொலல் வல்லான்; அஞ்சான்; அவனது தத்துவத்தை, இகல் வெல்லல் எந்தக் காலத்திற்கும் அரிது."

"சிலப்பதிகாரத்தில் ஒரு பதினைந்து சதவிகிதத்தையாவது கழித்துப் பார்க்கச் சொல்கிறது காலம். மணிமேகலையில் ஒரு முப்பது சதவிகிதத்தைக் கழித்தே பார்க்கலாம் என்கிறது காலம். ஆனல் கழிவிற்கே இடமின்றிக் காலம் அடிபணிந்தது வள்ளுவம் ஒன்றுக்குத்தான்.'

விற்பனையாகிறது !

திராவிடப்பித்தன் எழுதிய

'திராவிடநாடு திராவிடருக்கே!'

அறிஞர்கள் புகழ்ந்த அருமையான நூல். ஏராளமான ஆதாரங்கள் கொண்டது.

விலை ரூ. 2/-

விற்பனையாளருக்கும், கழகக் கிளைகளுக்கும் 25% கழிவு உண்டு.

எழுதுக :

தமிழ் நூற் பதிப்புக் கழகம், 203, தங்கசாலை, சென்னை - 1.

சேரன் கேரளமே! நீ செல்வதெந்தத் திசை?

— 3-ம் பக்கத் தொடர்ச்சி —

இவை போதும் கேரளக் கூட்டனிக்காரர்களின் சரிவையும் காங்கிரசாரின் நேர்மையின்மையையும் சுட்டிக்காட்ட. கேரளக் காங்கிரசார் இவர்களை எல்லாம் ஏமாற்றி எப்படியாகிலும் பதவி பெற்றுவிடத்துடிப்பதைக் காட்டவும் இவை போதும். முசுலீம் லீகினருக்குச் சபாநாயகர் பதவி தருவதாகச் சொல்லி ஏமாற்றியிருக்கின்றனராம். அவர்களும் ஒத்துழைக்கின்றனர். ஆட்சியைப் பெற வகுப்பு வாதிகளின் கழுத்தையும் பிணைத்துக் கொள்ளும் இவர்கள் போக்கை என்னென்று சொல்வது? பி. எசு. பி. கொடியும் முசுலீம் லீக் கொடியும் காங்கிரசுக் கொடியும் காந்தியார் உருவுடன் பதிக்கப்பெற்ற சின்னங்களை அணிந்து கொண்டிருக்கும் கூட்டணியாரின் போக்கு நேரு பெருமகனுருக்கே பிடிக்க வில்லை என்று அறிகிருேம். அண்மையில் பண்டிதர் பறந்து வந்து மலை ஞாலத்தைப் பார்த்து விட்டு சென்றபோது, அவர் வரும் வழிகளில் இருந்த முசுலீம் லீக் பி. எசு. பி. கொடிகள் இறக்கப்பட்டனவாம். பண்டிதர் கூட்டணிக்காரர் பற்றிப் பேசிய மேடையில் எந்தக் கொடியும் பறக்க விடப்படவில்லையாம். மேலாக, காங்கிரசுக்கு மட்டும் வாக்குக் கேட்டுப் பேசிய அவர் மறந்தும் பி. எசு. பி., லீக் ஆகியவற்றின் பெயரை உச்சரிக்க வில்லையாம்? பண்டிதருக்கே இந்தக் கூட்டுப் பிடிக்கவில்லை என்பதும், தன் கட்சி தான் இதை வெளிப்படையாகச் சொல்வதன் மூலம் நசிந்து விடக் கூடாதே என்று அஞ்சுகிருர் என்பதும் தெளிவாகவில்லையா? இவரால் குழப்பம் ஒழியுமா?

எதிர்க் கட்சியினரின் ஆட்சி எந்த இடத்திலும் அமையக்கூடாது என்பது காங்கிரசாரின் வெறிக்கொள்கை. அப்படி அமைவதானுலும் கண தந்திர பரீசத்தைப்போலத் தம்மையும் இணைத்துக்கொண்டு ஆள வேண்டும். அல்லது உள்ளே எப்படியிருப்பினும் வெளியே காங்கிரசே ஆள்வதாக பரப்பப்படும் எண்ணத்தை ஆதரிப்பதாகவும் இருக்க வேண்டும். இந்த மாதிரியான இழி நிலையையாகிலும் தழுவ ஒப்பும் காங்கிரசார், அவர்களை அழைக்காது பதவி ஏற்கும் நிலையிலுள்ள பொதுவுடைமையரைக் கருவறுக்கத் துடிக்கின்றனர். எதிர்க் கட்சியின் ஆட்சியைக் கவிழ்த்தியதோடு அமையாது, இத்தேர்தலில் வெற்றி பெறக் கொலைகளையும் மேற்கொண்டிருக்கின்றனர். கடந்த 26-ம் நாளன்று குருவாயூர் அடுத்த சித்தாத்தூரில் பொதுவுடைமைத் தொண்டர் ஒருவரைக் கொன்றதோடு, மேலும் நால்வரைக் காயப்படுத்தியிருக்கின்றனர். இவ்வெறியர்கள் காங்கிரசார் நடத்தும் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்தோர். இக்கொலையைச் செய்த ஐக்கிய முன்னணியினரே மற்ருேர் ஊரில் ஒரு சோக நாடகம் ஆடினர். அன்று அவர்கள் பேசிய மேடையில் ஒருவர் **அந்தோனி** ஆனுர். சீசரின் பிணத்தைத் தூக்கிக்கொண்டு உரோம மக்களுக்குமுன் அந்தோனி வந்தது போல, அக்காங்கிரசுக்காரர் ஒரு பிணத்தைத் தூக்கிக்கொண்டு வந்து காட்டி "இதோ பாருங்கள், தோழர்களே! பொதுவுடைமையரின் வெறிக்குப் பலியான கட்டிளங்காளையை! இவனைக் கொன்று உங்களை மிரட்டி வாக்குகளைப் பறிக்க நினைக்கும் கொடியோர்க்கு நீங்கள் தரப் போவது என்ன? உங்களுக்கு நீங்களே வரவழைத்துக்கொள்ளப் போவது சாவா? வாழ்வா? எது? எது?" என்று முழக்கிக் கலக்கியிருக்கின்றனர். மறுநாள் காலையில்தான் அது காதல் தோல்வியால் ஏற்பட்ட தற்கொலை என்று புரிந்தது. இப்படி ஊராரை ஏமாற்றி வாழ்வோர்க்கு நீங்கள் தரப் போவது கசையடியா? நல்வாக்கா? எது? எது?

கல்வியறிவு மிகப் பெற்ருேரே! கவின் மலைஞாலத்தோரே! அமைதி கொஞ்சும் உங்கள் மலைக்காடுகளிலும் மரணஓலம் கேட்க வேண்டுமா? எங்கும் இன்பம் முழங்க வேண்டாமா? கெட்டகுடி கெட்டுக்கொண்டே இருக்க வேண்டுமா? என்ருேபோன அமைதி இன்ருகிலும் திரும்ப வேண்டாமா? தில்லித் தளையறுக்க இன்றே தயாராகி விடுகிறீர்களா? உங்கள் வாழ்வுக்கு நீங்கள் கொள்ளி வைக்கத் தயாராகிறீர்களா?

★

தடை நீங்கியது, அண்ணுவின் பொன்னேட்டிற்கு!

கடந்த சில ஆண்டுகளாக, மலாயாவில் அறிஞர் அண்ணு அவர்களின் "திராவிட நாடு" இதழுக்கு இருந்து வந்த தடை கடந்த 24-12-'59 முதல் நீக்கப் பெற்று விட்டது என்பதைத் தெரிவிக்க மகிழ்கிருேம்! இச் செய்தியை 7-1-'60-ம் நாளிட்ட மலாயா அரசினர் கெசட் தெரிவிக்கிறது.

1951 ரெகுலேசன் 45-வது விதியின்படி செய்யப் பட்ட அவசரச் சட்டத்தின் படி "திராவிட நாடு" ஏட்டிற்கு விதிக்கப்பட்டிருந்த தடையைத் தற்போதைய மலாயாக் கூட்டரசின் உள் நாட்டு அமைச்சர் தமது 24-12-'59-ம் நாளிட்ட கட்டளைப்படி ஒழித்து விட்டார். இனி "திராவிட நாடு" மலாயா மக்களுக்குத் தவருது கிடைக்கும் என்ற மகிழ்வுச் செய்தியைத் தெரிவிக்கிருேம். நடிப்பிசைப் புலவர் மலாயா சென்றபோது இத்தடையை நீக்க அந்நாட்டு முதலமைச்சருடன் உரையாடியது குறிப்பிடத்தக்கது.

செய்தி: தோழர் நாரண. திருவிடச்செல்வன்.

சந்தனமும் புளியும் தந்தன நற்பாடங்கள்!

உணர்வுடைய ஒவ்வொருவரும் நினைக்கிறோம். நினைத்ததைச் செயல்படுத்துகிறோம். நினைப்பும் நடப்பும் முன் பின்னாகத் தொடர்ந்து நடப்பவை. நினைவின்றிச் செய்யும் செயல் அறிவுக்கு ஒவ்வாதது. நினைவு நுண்பொருள். நடப்பு பருப்பொருள். பருப்பொருளாகிய செயலையும் உருவத்தோடு இணைத்தபொழுதுதான் உணரமுடியும். உருவத்தினின்றும் செயலைப் பிரித்துணர இயலாது. நினைப்பும் செயலுருவில்தான் வெளிப்படுகிறது. சொல்லுருவில் வெளிப்படுவதைவிடச் செயலுருவில் அமைவதுதான் சமூக வளர்ச்சியின் அடிப்படை.

நினைக்கும் ஆற்றல் மனிதனுக்கு மட்டுமல்ல விலங்கினங்களுக்கும் உண்டு. ஆனால் எண்ணத்தின் நன்மை தீமைகளைப் பகுத்துப் பார்க்கும் ஆற்றல் மனிதனுக்கு மட்டுமே உரியது. அதுவே அவனை விலங்கினின்றும் உயர்த்துகிறது. விலங்கோடு விலங்காக வாழ்ந்த அவனை, இன்று சந்திரமண்டலத்திற்கும் அனுப்பிவைத்திருக்கிறது. மனிதனை மனிதனாக வாழச் செய்வதும் இத்தனிப்பெரும் ஆற்றலே. நினைக்கும் ஆற்றல் அற்றவன் பைத்தியக்காரன் என்று கருதப்படுவான்.

படைப்புக் காலந்தொட்டே மனிதன் நினைக்கவும் தொடங்கினான். விலங்கோடு விலங்காகக் காய் கனி கிழங்குகளையுண்டு, இலை தழைகளையுடுத்திக் குகைகளிலும் மரப்பொந்துகளிலும் வாழ்ந்த அவன், தன்னைச் சுற்றிலும் பரந்துகிடந்த இயற்கைச் செல்வத்தைத் தன் வாழ்க்கையுடன் இணைத்து எண்ணத் தொடங்கினான். சிறிது சிறிதாக ஒவ்வொரு பொருளும் அவன் வாழ்க்கையுடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டது. இதற்கு ஆக்கம் தந்தது நினைப்புத்தான் நினைத்ததைச் செய்தான். வெற்றியும் கண்டான். இயற்கையைக் கண்டு அஞ்சியஞ்சி வாழ்ந்த அவன் இன்று இயற்கையையே நடுநடுங்கச் செய்கிறான்.

மனிதன் நினைத்ததையெல்லாம் செய்துவிட முடிவதில்லை. நினைவின் வெற்றியில் மகிழ்ச்சியடையும் அவன் தோல்வியில் சோர்ந்துவிடுகிறான். நினைவு நல்லதாக இருந்தால், இன்றில்லாவிடினும் நாளை வெற்றி பெறுவது உறுதி. வெற்றியில் மகிழ்ச்சியும், தோல்வியில் சோர்வும் அடையாத உள்ளப்பண்பு ஒவ்வொருவரிடமும் அமையவேண்டும். அதுவே வாழ்வின் வெற்றி. "இடுக்கண வருங்கால் நகுக" என்னும் வள்ளுவன் வாக்கை நாம் ஒவ்வொருவரும் நினைவில் நிறுத்தவேண்டும்.

தனக்கு மட்டுமல்ல; தான் வாழும் நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் நன்மை பயப்பதையே எண்ணிச் செயல்பட வேண்டும். ஒருவனுக்கு நன்மை தருவது, மற்றொருவனுக்குத் தீமை தருவதாக இருக்கலாம். இன்று உலகில் நடக்கும் பல்வேறு போராட்டங்களுக்கும் இதுவே காரணம். தனது சொந்த நலத்தைப் பிறர் நலங்கருதிப் பணயம் வைக்கத் துணிந்தால் இந்நிகழ்ச்சிகள் தவிர்க்கப்படலாம். அத்தகைய கடமை வாழ்வே மனித சமுதாயத்தை ஒப்புயர்வற்ற சமுதாயமாக ஒளிரச் செய்யும்.

எப்பொழுதும் நல்லதையே நினைக்கவேண்டும். தன் வலியறிந்து, இடமும் காலமும் அறிந்து, அறிஞருடன் ஆராய்ந்து, தானும் நன்றாகச் சிந்தித்துப் பார்த்தபின் தன் அறிவையும் ஆற்றலையும் பிறர் துணையையும் கொண்டு ஒருவன் செயல்படுவானேயானால் அவன் வெற்றியடைவது [illegible]ண்ணம். இதைத்தான் "எ[illegible]ணித் துணிக கருமம்" என்று வள்[illegible]வர் வலியுறுத்துகிறார்.

உயர்ந்த எண்ணமும் செயலும் உடையவன்தான் பெருமையடைகிறான். அவனது எண்ணமும் சிந்தனையும்தான் மனித சமுதாயத்தை உய்விக்கின்றன. அன்பின் அடிப்படையில் அமைதியுடன் வாழச் செய்கிறது. உயர்ந்த எண்ணத்தின் அளவில் நாமும் உயர்கிறோம். அதில் தோல்வியே அடைந்தாலும் தொடர்ந்து உயர்ந்த எண்ணங்களையே விடாது கைக்கொண்டு வாழவேண்டும்.

"உள்ளுவ தெல்லாம்
உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து"

நினைப்பு மட்டும் உயர்ந்ததாக இருந்துவிட்டால் போதாது. சிந்தனையைச் செயல்படுத்த வேண்டும். தனது நினைவின் அடிப்படையில் அடைந்த வெற்றி தனது மகிழ்ச்சியாக மட்டும் இராமல் மற்றவர் மகிழ்ச்சியாகவும் மலரவேண்டும். அப்பொழுதுதான் அவன் வாழும் சமுதாயம் மலர்ச்சியடைகிறது. தானும் உயர்ந்து தனது சமுதாயத்தையும் உயர்த்துகிறான்.

"வெள்ளத் தனைய
மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு"

நீரின் அளவே நீர்ப்பூக்களின் தாளின் அளவும். மனிதனின் உள்ளத்தின் அளவே அவனது வாழ்க்கையின் உயர்வும். உயர்ந்த வாழ்வையே ஒவ்வொருவனும் விரும்புகிறான். பிறர் ஆக்கித் தந்த உயர்ந்த வாழ்க்கை நிலையானதாக இருக்கமுடியாது. நிலையான உயர்வாழ்வு ஒவ்வொருவர் உள்ளத்திலும்தான் இருக்கிறது.

உயர்ந்த எண்ணம் உள்ளத்திற்கு உரமளிக்கிறது. "தனது எண்ணம் உயர்ந்தது" என்ற எண்ணத்தினால் அவன் நிமிர்ந்த நடையும், நேர்கொண்ட பார்வையும் பெறுகிறான். எவருக்கும் அஞ்சாத நெஞ்சுறுதியையும் அடைகிறான். அந்த உறுதியும் ஊக்கமும் அவனது நிலையான செல்வங்களாகின்றன.

தாழ்ந்த எண்ணங்கள் ஒருவனது உள்ளத்தை மாசுபடுத்தி அவனையும் அவன் வாழும் சமுதாயத்தையும் நலிந்து நசித்துவிடச் செய்கின்றன. தாழ்ந்த எண்ணங்களுடையவன் என்றும் வாழ்க்கையில் வெற்றியடையமாட்டான். தானும் நல்வாழ்வு வாழமாட்டான். பிறர் நல்வாழ்வைக் காணவும் பொறுக்கமாட்டான். குட்டையிலே புரள்வதில் மகிழ்ச்சியடையும் எருமையைப்போல அவனும் கீழான எண்ணங்களிலும் செயல்களிலும் மகிழ்ச்சியடைகிறான். அவன் உருவத்திலே மனிதனாக உலவினாலும் உள்ளத்திலே அவன் மனிதன் இல்லை.

நினைப்பு நல்லதாக அமையும் பொழுது தானும் மகிழ்ந்து உலகையும் மகிழ்விக்கிறான். தானும் வாழ்ந்து பிறர் வாழவும் வழிவகுத்துக் கொடுக்கிறான்.

நிலத்தாயின் வயிற்றிலே எண்ணற்ற செல்வங்கள் பொதிந்து கிடக்கின்றன. அவை வெளிக்கொணரப் படும்பொழுதுதான் உலகுக்கு ஆக்கம் தருகின்றன. மண்ணில் மறைந்து கிடக்கும்வரை எவருக்கும் பயன்படுவதில்லை. அவற்றை வெளிக்கொணரத்தான் எத்தனை பாடுகள்! அத்தனை பாடுகளுக்கும் பின்னர்தான் அவற்றால் உலகம் பயனடைகிறது. அதுபோல, ஒருவனது உயர்ந்த எண்ணங்கள் அவனது உள்ளத்தின் அளவே நின்றுவிடுவதால் பயனில்லை. அவற்றினைச் செயலுக்குக் கொண்டுவரவேண்டும். உயர்ந்த எண்ணங்கள் செயல்படும் பொழுது எண்ணற்ற சிக்கல்களும் துன்பங்களும் நிகழலாம். ஆனால் அதற்குப் பின்னர் ஏற்படும் பயன் அளவிடற்கரியது. தன் உணவையும் உணர்வையும் உயிரையும் கொடுத்துத் தன்னுடலுக்குள் பத்துத்திங்கள் வைத்துக் காத்த தன் அருமைக் குழந்தையை உலகுக்குக் கொண்டு வர ஒரு தாய் என்ன படுகிறாள்? அதனை ஈன்றபொழுது அவளடையும் மகிழ்ச்சிக்கு எல்லையேது! அந்தத் தன்னலமற்ற தாயின் நிலையில்தான் உயர்ந்த சிந்தனையாளன் ஒவ்வொருவனும் இருக்கிறான்.

படாத பாடெல்லாம் பட்ட அந்தத் தாய் அதன் பலனை அனுபவிக்காமலே மறைந்துவிடுவதுமுண்டு. அவளது பாடுகளின் பயனைப் பிறர் அனுபவிக்கின்றனர். இதே நிலை உயர்ந்த சிந்தனையாளனுக்கும் ஏற்படுவதுண்டு. ஈரைந்து திங்கள் சுமந்து பெற்ற தன் செல்வத்தைத் தான் அனுபவிக்காமலே போய்விட்டால் என்ன செய்வது என்ற எண்ணத்தில் எந்தத் தாயும் குழந்தைப் பேற்றை விரும்பாமலிருப்பதில்லை. அதுபோலவே உயர்சிந்தனையாளனும் தனது சிந்தனையின் பலனைத்தான் அனுபவிக்காது போய்விடுவோமோ என்ற எண்ணத்தில் சிந்திக்காமல் இருந்துவிடுவதில்லை.

"உயர்ந்த நினைப்பே மனிதனை உயர்த்தும்" எனும் பேருண்மைக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்த பெரியோர்கள்தான் காலவெள்ளத்தையும் கடந்து வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். உலக மாமறைகளும் அறிவியற் பெருவளர்ச்சியும் நினைப்பினின்று எழுந்த பெருஞ்செல்வங்களே.

நல்ல நினைப்பும் உயர்ந்த சிந்தனையும் உடையவனின் உள்ளம்போல முகமும் மலர்ந்திருக்கும். அருள் ஒழுகும் புத்தரின் அழகு முகமும், கருணைக்கடலான காந்தியாரின் இனிய முகமும் நமக்கு இதைத்தான் கூறுகின்றன. நல்ல எண்ணம் மனதில் உறுதியையும், வாக்கில் இனிமையையும், முகத்தில் தெளிவையும், செயலில் நேர்மையையும், வாழ்வில் உள் அமைதியையும் கொடுக்கும். நல்ல நினைப்பே நல்ல செயலின் வித்து. சந்தனக்கட்டையை அரைத்தால்தான் மணங்கமழும். புளியங்கட்டையை அரைத்தால் மணங்கமழுமா? உள்ளத்தின் தூய்மையே நல்ல எண்ணத்தின் தூய்மைக்கும், செயலின் தூய்மைக்கும் அடிப்படை.

"எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்தநல் லறிவு வேண்டும்"

-இரகுபதி சாமிநாதன், பீ. ஏ.

வருந்துகிறோம்.

கழக அனுதாபியும், கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் மைத்துனருமான திருவாரூர் ஆர். சண்முகம் அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் நாகரத்தின அம்மையார் 27-12-59 அன்று திடீரென இயற்கையெய்தினார்கள் என்ற செய்தி கேட்டு வருந்துகிறோம்.

அன்னாரின் குடும்பத்தாருக்கு நம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

★

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் து. சோமசுந்தரம் அவர்களது தந்தையார் திரு. துரைமாணிக்கம் கோபாலர் அவர்கள் 18-1-60 அன்று இயற்கையெய்திய செய்தி கேட்டு வருந்துகிறோம்.

அன்னாரின் குடும்பத்தாருக்கு நம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

நினைப்பும் நிகழ்ச்சியும் நீள்புவிக்காக்குக!

ஞானம் பிறந்த கதை

திடீரென்று ஏற்பட்டு விடுகிற சில நிகழ்ச்சிகள் வாழ்க்கையையே திசை மாற்றி விடுகின்றன. அப்படிச் சம்பவங்கள்தாம் இந்த 'ஞானம் பிறந்த கதை'களுக்கு அஸ்திவாரம்.

'பொங்கல் மல'ரில் பர்த்ருஹரி கதை வந்தது. இது இரண்டாவது.

இந்தக் கதைகள் என்னுடைய கற்பனைகளல்ல. வரலாற்றிலும், வாய்மொழியிலும் நான் தெரிந்து கொண்டவை. இவற்றில் கலந்திருக்கும் சில 'அளப்பு'களுக்கும் நடைக்கும் நான் சொந்தக்காரன். அவ்வளவுதான்! —ப. பு.

மரங்களடர்ந்த காட்டுப்பாதை.

இரட்டை மாட்டுப் பெட்டிவண்டி ஒன்று தன்போக்கில் போய்க் கொண்டிருந்தது. அதைத் தொடர்ந்து, அதனை வழிமறிக்கும் வகையில் குதிரை ஒன்று விரைந்து போய்க் கொண்டிருந்தது.

இந்தக் காட்சியைப் பின்னால் வந்து கொண்டிருந்த ரதத்திலிருந்து கவனித்தான் வேமன்னா.

ஆந்திர நாட்டில் ஒரு சிற்றரசு. அதன் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்திருந்தவன் அநவேமா. மனைவி நரசாம்பா. மன்னனின் தம்பி, இளவரசன் வேமன்னா, பிள்ளைப் பிராயத்திலேயே பெற்றோரை இழந்து விட்டவன். அண்ணனுக்குத் திருமணமானது முதல் அண்ணிதான் அவனுக்கு அன்னையாகத்திகழ்ந்தாள். அவளுக்கும் குழந்தைச் செல்வமில்லாததால் அந்தக் குறைதீர்த்த கோமானாக அவனை அவள் பாவித்தாள்.

வேமன்னா வேங்கை நிகர் வீரன். நாட்டின் வீரர்களின் நாயகம். அழகும், ஆற்றலும் நிரம்பப் பெற்றவன். மக்கள் அனைவருக்கும் அறிமுகமானவன். இளவரசனாக இருக்கும்போது இதற்கு முன் எவரும் பெற்றிராத இடத்தை மக்கள்மனதில் பெற்றவன்.

ஒரு ஊரில் திருவிழா. வீதியெங்கும் மக்கள் வெள்ளம். சுவாமி புறப்பாட்டுக்குத் தயாராகியது. வழக்கம் போல் முதல் மரியாதை பெற்று, வழியனுப்பிவைக்க அரச குடும்பத்தினர் வந்திருந்தனர்— வேமன்னாவைத்தவிர. ஆயினும் வேமன்னாவுக்காக மட்டும் புறப்பாட்டைத் தாமதிக்காமல் தொடரச் சொல்லி அனுமதித்து விட்டான் மன்னன். ஆனால், எப்படியோ, எங்கிருந்தோ துள்ளிக் குதித்து வந்து நின்றான் வேமன்னா.

'மன்னியுங்கள் அண்ணா, அண்ணி! தாமதமாக வந்து விட்டேன்!'

—அவர்களிடம் பேசிக் கொண்டிருந்த போதே அவன் கண்கள் கூட்டத்தை முற்றுகையிட்டன.

அந்த மக்கள் மத்தியில்—

வேமன்னா திகைத்து விட்டான்! அப்படிப் பட்டதொரு அழகியை அவன் அதற்கு முன் எங்கும் எப்பொழுதும் கண்டதேயில்லை.

குனித்த புருவம், கொவ்வைச் செவ்வாய், இனித்த பற்கள், எழிற் கன்னங்கள், தனித்த பிறை நெற்றி, தாவும் விழிகள்...அழகுச்சிலை அவள்!

அவளுக்கு அருகில், அவளுடன் ஒரு கிழவி. அவளும் ஒரு காலத்தில் இவளைப்போல் இருந்திருக்கவேண்டும் என்பதை இப்போது பார்த்தாலே கணக்கிட்டு விடலாம்.

இந்த இருவரையும் கண்ட அவன் கண்களுக்கு இவர்களையே பார்த்துக் கொண்டிருந்த மற்றொருவனும் தெரியாமற் போகவில்லை. அவன் ஒரு இளந்துறவி. அனேகமாக 'போலிச் சாமியா'ராகத்தான் இருக்கவேண்டும். உண்மைத்துறவி ஏன் பெண்ணைப் பார்க்கிறான்!

இந்த மூவரும், தனித்தனி அவர்களின் சிறப்பும் அடிக்கடி அவர்களைக் கவனிக்கத் தூண்டியது வேமன்னாவை.

அண்ணன், அண்ணி இவர்களின் திருப்திக்காக அவர்களிடம் ஒப்புக்கு எதையோ 'உளறி' விட்டுத் திரும்புமுன்—

என்ன ஆச்சரியம்! அழகியையும் காணோம்; கிழவியையும் காணோம். அதைத் தொடர்ந்து அவன் எதிர் பார்த்தபடி அந்தத் 'துறவி'யையும் காணோம்.

இவர்களை விளங்கிக்கொள்ள வேண்டும் என்று விரும்பினான் வேமன்னா. சீக்கிரமே விடைபெற்றுப் புறப்பட்டான். ரதம் விரைந்தது. வழியில்தான் அவன், பெட்டிவண்டியையும், குதிரையையும் கண்டான்.

குதிரை வீரனால் வண்டியுள்ளிருப்போருக்கு ஏதாவது ஆபத்து ஏற்படக் கூடும் என்று அவனுக்குத் தோன்றியது. விரைந்து வந்து வழிமறித்தான்.

அவன் நினைப்பு தவறல்ல. குதிரை வீரன் பெட்டிவண்டியைத் துரத்தி வந்தவன்தான். இருவருக்கும் சண்டை. தோல்வியுற்ற குதிரை வீரன், 'விலைமாது இதன் உள்ளிருப்பவள்; துரத்தி வந்தால் உனக்கென்ன?' என்றான்.

அவன்?–அந்தத் 'துறவி'தான்!

முடிவில் அவனுடைய ஒப்பனைத் தாடியும், மீசையும் வெளிப்பட்டன. பிறகு அவன் வேமன்னாவின் காலை வணங்கி உயிர்ப்பிச்சை கேட்டு ஓடினான்.

'அவன் அவனா'னால் வண்டியுள்ளிருப்பவர்கள்?

வேமன்னா ஆச்சரியத்தால் ஸ்தம்பித்துப் போனான்.

வண்டியிலிருந்து அந்த அழகியும், கிழவியும் இறங்கிவந்தனர். அவனை அடையாளம் கண்டுகொண்ட கிழவி சொன்னாள்:

'இளவரசே! தக்க சமயத்தில் வந்து உதவினீர்கள். இல்லாவிட்டால் இவன் என்னபாடு படுத்துவானோ! குலத்தில் தாசிகள் நாங்கள். எனினும் குணங்கெட்டவர்களல்ல. இவள் என் பேத்தி. திருவிழாப் பார்க்கவேண்டும் என்ற இவளுடைய பிடிவாதம்தான் இந்தத் தொல்லைக்குக் காரணம். உங்களுக்கு நன்றி! ஒரு வேண்டுகோள்: தங்களின் திருப்பாதம் இந்த ஏழைகளின் குடிசையில் படியவேண்டும் – சிரமத்தைப் பொருட்படுத்தாமல் இந்தக் கோரிக்கையைத் தாங்கள் ஏற்க வேண்டும்...!'

கிழவியின் பேச்சைவிட, குமரியின் வாய் சிந்தும் சிரிப்பிலேயே தன் மனத்தைக் கொள்ளை கொடுத்து நின்றுகொண்டிருந்தான் வேமன்னா.

'அவசியம் வரவேண்டும்!'

கிழவியின் இரண்டாம் அழைப்பு அவனைத் திருப்பியது. அதோடு அவள் தங்கள் ஊரையும், தெருவையும் சொன்னாள்.

'வருகிறேன்' என்பது போல் தலையசைத்தான். அவன் வாய் தானாகவே ஒரு கேள்வியைக் கேட்டது:

'இவளுடைய பெயர்?'

கிழவியைத் தான் அவன் கேட்டான்; எனினும் கிள்ளை வாய் திறந்தது:

'விஸ்வேஸ்வரி! 'விஸ்வா' என்று அழைப்பார்கள்!'

அழகு குறைவாகத்தான் பேசும் போலும்! அவள் குறைவாகத்தான் பேசினாள்.

அவளே அழைத்து விட்ட பிறகு அவன் நிற்பானா? அடுத்த நாள் இரவில் அவசியம் வருவதாக வாக்களித்து விட்டு, அரண்மனைக்குத் திரும்பினான் வேமன்னா.

... ...

இரவு முழுதும் அவனால் தூங்க முடியவில்லை. அடுத்த இரவை எண்ணியே விழித்துக் கிடந்தான். விடிந்ததும் முதல் வேலையாக அண்ணியிடம் முதல் நாள் 'கதை' முழுவதையும் விவரித்தான். தன்னுடைய எந்தச் சேதியையும் தப்பாமல் அவளிடம் சொல்லி விடுவது அவனுக்கு வழக்கம்.

நரசாம்பாவுக்கு அந்தக் கதையும் அவன் போக்கும் பிடிக்க வில்லை. எனினும் தன் அன்பிற்குரிய 'பிள்ளை' என்பதால் அவனுக்குக் குறுக்கே நிற்க விரும்ப வில்லை அவள். அதோடு, வேமன்னாவுக்கு விரைவில் ஏவளாவது ஒரு இளவரசியைத் தேடிப் பிடித்துத் திருமணத்தை முடித்து விட்டால் இந்தக் கதை தொடரவா போகிறது!

வேமன்னா விஸ்வாவை நோக்கி ஓடினான்.

கதை தொடர்ந்தது.

நாள் நகர நகர, வேமன்னா - விஸ்வா விவகாரம் ஊர் முழுதும் விளம்பரமாகியது. வீணையும் நாதமும், மலரும் மணமும், நகமும் சதையும் என்பவையெல்லாம் சாதாரண உவமைகள் அவர்களுக்கு என்று பேசப்பட்டது.

எப்போது பார்த்தாலும், தன்னுடைய எல்லா வேலைகளையும் விட்டுவிட்டு 'விஸ்வாவே கதி' என்று கிடந்தான் வேமன்னா. அரண்மனை என்று ஒன்று இருப்பதையும், அங்கே தன் அண்ணனும் அண்ணியும் இருப்பதையும் கூட மறந்துவிட்டான் அவன்.

முதலில் புன்னகை, பிறகு பூ, தொடர்ந்து பட்டுப்புடவைகள், அப்புறம் பொன்...இப்படி வரிசையாக அரண்மனைக்கு-குறிப்பாக நரசாம்பாவுக்கு உரியவை அனைத்தும் விஸ்வாவுக்கு அவனால் அர்ப்பணிக்கப் பட்டன.

அவன்மீது வைத்த பிரியத்தால், தன் நகைகள் அனைத்தையும் கொடுத்துவிட்டு, ஒரே ஒரு ரத்தினப் பதக்கத்தை மட்டுமே தன்னுடையதாக வைத்துக்கொண்டு, வாடிக் கிடந்தாள் நரசாம்பா. நகைகள் போனது பற்றிக்கூட அல்ல, இப்படி ஊரார் நகைக்க 'அவளே கதி' என்று கிடக்கிறானே வேமன்னா என்றே அவள் கவலைப்பட்டாள். இதற்குத் தானா அவள் அவனை இத்தனை சிறப்போடு சீராட்டிப் பாராட்டி வளர்த்தாள்!

நரசாம்பா மட்டுமல்ல, நல்லவர்களில் பலரும் அவனுக்கு எவ்வளவோ எடுத்துச் சொல்லிப்பார்த்தனர். எல்லாம் வெட்டவெளியில் வீசிய வார்த்தைகளைப்போல் காற்றில் கலந்தனவே தவிர, அதைத் தன் காதிலேயேபோட்டுக்கொள்ளவில்லை வேமன்னா.

இந்த நிலையில் ஒருநாள் வேமன்னா திடீரென அரண்மனைப் பிரவேசம் செய்தான்.

வந்தவன் நேராக, சில நாட்களாக உடல்நிலை சரியில்லாமலிருந்த நரசாம்பாவைப் போய்ப் பார்த்தான்.

'வந்தாயா மகனே! உன்னைக் காணாமல் நான் எவ்வளவு தவித்து விட்டேன்!' என்று வரவேற்றாள் அவள்.

'வேமன்னா திருந்திவிட்டான்; அதனால் தான் திரும்பிவிட்டான்' என்றே அவள் எண்ணினாள். அவனுக்குஉடனேயே திருமணம் செய்து வைப்பதைப் பற்றித் திட்டமிட்டாள்.

— 11-ம் பக்கம் —

'தென்றல்' அளிக்கும்
கருநாடகச் சிறப்பிதழ்
★
பிப்ரவரித் திங்களில்
வெளிவருகிறது!
★
அங்கு கழகம் வளர்ந்தவிதம்
அனைத்தையும் காட்சியில்—
எழுத்தில் தருகிறது!

வருந்துகிறோம்

நமது "தென்றல்"லைத் தமது பிளாக்குகள் மூலம் அழகுபடுத்தி வரும் ராயன் பிளாக் மேக்கர்சு கம்பெனி உரிமையாளர் திரு. தியாகராயன் அவர்கள் காலமானார்கள் என்ற செய்தியை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னார் குடும்பத்தார்க்கு நம் இரங்கல் உரித்தாகுக!

— ஆசிரியரும்
பொறுப்பாளரும்.

— 10-ம் பக்கத் தொடர்ச்சி —

ஆனால் அவள் நினைத்தற்கெல்லாம் மாறாகப் புதிய 'குண்டு' ஒன்றைத் தூக்கி வீசினான் வேமன்னா:

'அம்மா! நான் கேட்பதை நீங்கள் தவறாமல் தரவேண்டும்!'

'நீ கேட்டு எதை நான் தரவில்லை! தாராளமாகக் கேள்!'

'கேட்டால் பிறகு மறுக்க மாட்டீர்களே...?'

'இல்லை; அவசியம் தருகிறேன். கேள்!'

'விஸ்வாவுக்கு நெடுநாளாகஆசையாம்...'

இந்த நேரத்தில் விஸ்வாவைப் பற்றிப் பேசியதால், அவள் முகம் சுளித்தாள்.

'என்ன அது? சொல்லேன் அதை!'

'அப்புறம் நீங்கள் ஆத்திரப் படக்கூடாது!...'

'இல்லை; சொல்!'

'அன்றைக்கொருநாள் திருவிழாவில் நீங்கள் அணிந்திருந்தபோதே அதைப் பார்த்தாளாம். அது முதலே அதன்மீது அவள் தீராத ஆசை வைத்துவிட்டாளாம்!...'

'முன்னுரை போதும் வேமா; முதலில் என்ன வேண்டும் என்பதைச் சொல்!'

'ரத்தினப்பதக்கம்!-அது வேண்டுமாம் அவளுக்கு!'

—பயத்தோடுதான் கேட்டான் வேமன்னா பரிதாபமாகச் சிரித்தாள் நரசாம்பா.

புரியவில்லை அவனுக்கு. ஒருவேளை தர மறுக்கிறாளோ? அல்லது காணாமல் போய்விட்டதோ?

சிரித்துவிட்டு அவள் சொன்னாள்:

'இதைத் தவிர என்னிடத்தில் வேறு நகைகள் இல்லை என்பது உனக்குத் தெரியும். அதற்காக இதை உனக்குத் தரப்போவதில்லை என்று எண்ணிவிடாதே. ஆனால் இதை உபயோகமில்லாத ஒருத்தியிடம்-பண்பும், பயனுமில்லாத ஒரு வேசியிடம் - கொடுக்கப்போகிறாயே என்றுதான் பரிதாபப்படுகிறேன்... பாவம்! ஏமாந்தவன் நீ. இல்லாததை இருப்பதாகக் கற்பனை செய்து கொண்டிருப்பவன்!'

'அண்ணி! நீங்கள் ரத்தினப்பதக்கத்தை வேண்டுமானால் இல்லை என்று சொல்லுங்கள்; அதற்காக என் விஸ்வாவைப் பண்பற்றவள் என்று தரக்குறைவாகப் பேசாதீர்கள். நான் வருகிறேன்!'

ஆத்திரத்தோடு திரும்பிய வேமன்னாவைத் தடுத்து நிறுத்திய நரசாம்பா சொன்னாள்:

'நல்லது வேமன்னா. உன் விருப்பம்போல் ரத்தினப் பதக்கத்தை எடுத்துப்போய் விஸ்வாவிடம்கொடு. ஆனால் ஒரு நிபந்தனை: மாலை வேளையில் வீட்டுக் கதவுகள்,எல்லாவற்றையும் திறந்து வைத்து விட்டு, வெளி நடை வாசலில் இந்தப் பதக்கத்தை வைக்க வேண்டும். பிறகு இதை உன் விஸ்வா பிறந்த மேனியோடு—நிர்வாணக் கோலத்தோடு—வந்து எடுத்துப் போகவேண்டும். அவள் அப்படி எடுத்துப்போய் விட்டால். விலை மதிக்க முடியாத இந்தப் பதக்கத்தை அவளே வைத்துக் கொள்ளலாம்; சரிதானா?'

'என் விஸ்வா, இந்தப் பதக்கத்துக்காகப் பண்பற்ற முறையில் நடந்து கொள்வாள் என்று எண்ணுகிறீர்கள் அண்ணி! மொத்தத்தில் பதக்கத்தைத் தரும் எண்ணம் உங்களுக்கு இல்லை; அப்படித்தானே?'

'அவசரப்படாதே வேமா; நான் உனக்காக அல்ல, என்னுடைய திருப்திக்காகவேதான் இதைச் செய்யச் சொல்கிறேன். போ! இதைச் செய்து பார்!'

ரத்தினப் பதக்கத்தைக் கையிலெடுத்துக் கொண்டு வேண்டா வெறுப்போடு வெளியேறினான் வேமன்னா. அவன் போன திசையையே நெடுநேரம் பார்த்துக் கொண்டிருந்த நரசாம்பாவின் முகத்தில் நின்ற பரிகாசம் குறைய, அதிக நேரமாயிற்று.

... ...

மாலைநேரம்.

தவழ்ந்த தென்றலில் தனிச்சுகம் நெளிந்தது வானம் அழுக்கற்றுத் திகழ்ந்தது மஞ்சள் வெய்யில் மண்ணைப் போர்த்தியிருந்தது.

விஸ்வாவின் வீட்டிற்குள் மெதுவாக அடியெடுத்து வைத்தான் வேமன்னா.

அவனுடைய வருகையை ஆவலோடு எதிர்பார்த்திருந்த விஸ்வா, 'வந்துவிட்டீர்களா!' என்று ஆரத் தழுவிக்கொண்டாள் அவனை. அவனுடைய வருகைக்கு ஒன்று, வார்த்தை தொடங்குவதற்கு முன்னுரையாக ஒன்று, வெளிவந்த வார்த்தைகளுக்கு ஒன்று.....இப்படி வரிசையாக முத்தங்களை வாரி இரைத்தாள். இடையே தன்னுடைய இனிய குயில் குரலால் கேட்டாள்:

'ரத்தினப்பதக்கம்?'

'கொண்டு வந்திருக்கிறேன்!'

—சாதாரணமாகச் சொன்னான் அவன்.

'எனக்குத் தெரியும். நான் கேட்டு எது கிடைக்கவில்லை!'

—பெருமையால் அவள் பூரித்துப் போனாள்.

'ஆனால் விஸ்வா...' - வேமன்னா தடுமாறினான்

'என்ன ஆனால்?...'

'சொல்வதற்கே கூச்சமாக இருக்கிறது விஸ்வா. இத்தனை நாள் நான் எவ்வளவோ சொல்லியும் என் அண்ணி உன்னைப் புரிந்து கொள்ளவில்லை. பாரேன்... இந்தப் பதக்கத்தை இப்போது வாசற்கதவுகள் எல்லாவற்றையும் திறந்து வெளிவாசல் நடைபாதையில் வைக்க வேண்டுமாம். தெருவில் போவோர், வருவோர் பார்க்கும்போது இதை நீ பிறந்த மேனியோடு வந்து எடுத்துப் போக வேண்டுமாம். அப்படி எடுத்துப் போய் விட்டால் பதக்கம் உனக்குச் சொந்தமாகிவிடுமாம். பார்த்தாயா இந்த அண்ணியை!'

விஸ்வா ஒருகணம் திகைத்தாள். பிறகு கேட்டாள்:

'அப்படி எடுத்தால் அது எனக்கே என்பது நிச்சயம்தானா?'

'ஆமாம்; அப்படித்தான் அண்ணி சொன்னார்கள்!'

'அதை இப்படிக் கொடுங்கள்!'

வேமன்னா கொடுத்தான். வாங்கி அதன் வனப்பை, நேர்த்தியை ஒரு முறை தெளிவாகப் பார்த்தாள். பிறகு 'விடுவிடு' வென்று நடைவாசலை நோக்கி நடந்தாள்.

அவளுடைய செய்கை வேமன்னாவுக்குப் புரியவில்லை. என்ன செய்யப் போகிறாள் அவள்?

வேகமாகப் போன விஸ்வா. வாசற்கதவுகள் அனைத்தையும் விரியத் திறந்தாள். வெளி நடை வாயிலில் பதக்கத்தை வைத்து விட்டு நேரே வேமன்னாவிடம் திரும்பினாள்.

'இடம் சரிதானா?'

வேமன்னா திகைத்தான் இது என்ன வேடிக்கை! கதவுகளை விரியத் திறந்ததே அவனுக்கு வெட்கமாக இருந்தது.

அடுத்த கணம்-

விஸ்வாவின் மேலாடை தானாகக் கீழே நழுவியது. பிறகு ரவிக்கை; பிறகு மார்க்கச்சை; பிறகு கொஞ்சங் கொஞ்சமாக - கடைசியில் முழுவதுமாகச் சேலை...

விஸ்வா நிர்வாணமாக - பிறந்த மேனியோடு - பதக்கம் வைக்கப் பட்டிருந்த நடைவாசலை நோக்கி நடந்தாள்.

'விஸ்வா!'-வேமன்னா ஆத்திரத்தோடு கத்தினான்.

அந்த ஆத்திரத்தை அலட்சியப் படுத்திவிட்டு, அப்படியே போய் ரத்தினப்பதக்கத்தை எடுத்துக் கொண்டு, கவர்ச்சிகரமான பார்வையொன்றை உமிழ்ந்துவிட்டு, வழக்கமான வசீகரப் புன்னகையோடு வேமன்னாவை நோக்கி ஒயிலாக நடந்துவந்தாள் விஸ்வா. ஆமாம்; நிர்வாணக் கோலத்தோடு!

பிறகு...பிறகு, வேமன்னா, யோகி வேமன்னா ஆனான்! ★

ஜூபிலி
பிஸ்கட்ஸ்
• குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
[illegible] சங்குபீன் [illegible] திண்டுக்கல்ரோடு, மதுரை.

பகைவனின் காதலி
(நாடகம்)

ஆசிரியர்: இரா. தயாநிதி.

போர் வெறி கொண்டலையும் மன்னன்; அவனுக்குத் துணையாக நிற்கும் தளபதி; அமைதியே உருவான குருநாதர் பகைவனைக் காதலிக்கும் மன்னனின் தங்கை; தியாகமே உருவெடுத்த தோழி; கடமை தவறாத குருநாதரின் மகன்; இவர்களைச் சுற்றிக் கதை ஓடுகிறது. இது ஒரு ராசா-ராணிக் கதை என்றாலும், பல புதுமைகள் நிறைந்திருக்கின்றன-

இந்த நாடகத்தை உருவாக்கிய தயாநிதி அவர்கள், நல்ல தமிழில், சரளமான நடையில் எழுதி கருத்துள்ள உரையாடல்களை அமைத்திருக்கிறார்.

"உலகினரின் நல்வாழ்வுக்கு என்றென்றுமே வாளும் வேலும் வழி சொல்லாது. வாள் வீச்சிலும், வேல் வீச்சிலும் வையகம் கண்ட வாழ்வு, குருதி வெள்ளமும், பிணக்குவியலும் தான்! இன்றில்லையேனும் என்றேனும் ஒரு நாள் அன்பறந்தான் வெல்லும்! மனித இனம் வாழ வழி சொல்லும்!"

—இதுபோன்று ஆங்காங்கே வரும் வசனங்கள் கருத்துக்கு விருந்தாக அமைகிறது. இந்த நாடகம், படிக்கும்போது அடுத்த கட்டம் என்ன என்ற ஆவலைத் தூண்டுகிறது. படிப்பதற்கும், நடிப்பதற்கும் ஏ[illegible] நல்லதொரு நாடகம் பகை[illegible] காதலி. இதன் ஆசிரியர் [illegible] பாராட்டுக்குரியவர்.

கிடைக்குமி[illegible]
மூவேந்[illegible]
கா[illegible]
விலை [illegible]

தென்னக[illegible]
வர[illegible]

ஆசிரியர்: [illegible]

தென்னகத் திரைப்ப[illegible] அதன் தொடக்கத்திலி[illegible] வரை, ஆசிரியர் 'மைனு' [illegible] சுருக்கித் தந்துள்ளார்.

திரைப்படத் தொழில் [illegible] தொடக்கத்தில் எப்படியிருந்[illegible] இன்று எப்படி வளர்ந்திருக்கிற[illegible] என்பதையும், திரைப்படத் தொழிலை[illegible] தென்னகத்தில் முதல் முதலில் மேற்கொண்டவர்கள் யார், முதல் திரைப்பட இயக்குனர் யார் என்பதையும், நடிக-நடிகைகளையும் இதர விபரங்களையும் சீரிய முறையில் தொகுத்திருக்கிறார். மொத்தத்தில் சுவையான செய்திகளைத் தரும் சிறு நூல். இதைத் தொகுத்த ஆசிரியர் 'மைனு' பாராட்டுக்குரியவர்.

கிடைக்குமிடம்:

மைனு பிரசுரம்,
மே/பா. சண்டே டைம்சு அச்சகம்,
69, பீட்டர்சு ரோடு,
சென்னை-6.

விலை 50 காசு.

—கண்.

செழியன் உலா

தாளிக்குப் பேரு ஏமி?

அதிகம் படித்த மூஞ்சூறு கழனிப் பானையில் விழுந்ததாம்! "அவன் கிடக்கிறான் குடிகாரன்; எனக்குப் போடு ரெண்டு மொந்தை!" என்று கிளம்பியிருக்கும் கேரளக் காங்கிரசாரைப் பார்த்தால் இந்த நினைப்புத் தான் வருகிறது. கேரளக் காங்கிரசாரும் பொதுவுடைமையரும் தேர்தலுக்குக் கூட்டங்களை நடத்துவதை விட, நாடகங்களை நடத்துவதில் அதிக அக்கறை காட்டுகின்றனராம். 100-க்கு மேற்பட்ட நாடகங்கள் தயாரிக்கப்பட்டுக் கேரளமெங்கும் நடத்தப்படுகின்றனவாம். பொதுவுடைமையாரைத் தோற்கடிக்கும் அளவுக்குக் காங்கிரசாரின் நாடகக் கலாட்டாக்கள் பெருகியிருக்கின்றனவாம்!

கலை மக்கள் இதயத்தை ஈர்க்க நல்லதொரு கருவி என்று சொல்லி நாம் அதன்மூலம் நம் கருத்துக்களைச் சொல்லும்போது சீறி எழுவர் காங்கிரசார். சென்னை மாநிலத்து அட்ட... கள் மட்டும் இப்படியில்லை. ஆந்திர மாநிலக் காங்கிரசாரும் கூட 1955-ல் தேர்தலின்போது, இப்படித் தான் பேசினர். இப்போது புது மணமகளான ஒரு சினிமா நடிகை அத்தேர்தலில் ஆந்திரப் பொதுவுடைமையருக்காக உழைத்தார்; கலை நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார். அதைக் கண்டவுடன் ஆந்திராக் கோங்கூரா சட்னி வீரர்கள் குதிகுதி எனக் குதித்தனர்; "தேவடியாளைக் காட்டி வாக்குக் கேட்கின்றனர்!" என்று கீழ்த்தரமாகவும் பொதுவுடைமையரை ஆதரித்த அந்த நடிகையைத் திட்டித் தீர்த்தனர்! "கூத்தாடியைக் காட்டி ஆந்திரப் [illegible]ாதுவுடைமையர் வாக்குக் கேட்[illegible]னர்!" என்ற அதே காங்கிரசார் [illegible]டியே நாகையாவையும் [illegible]ரையும் பட்டாளம் பட்டாள[illegible]க்கொண்டு போயினர். [illegible]டைகளிலும் நட்சத் [illegible]தன. அப்போது [illegible] பேரு ஏமி?" [illegible]வர்கள் முகமூடி

[illegible]மது மௌன குரு [illegible] போதிக்கக் கலை [illegible]யும் அறிவோம்!

[illegible]யில் கேரளக்காங்கிர [illegible]த்துக் கிழித்துத் தள்ளு[illegible]. விடிய விடியக்கூட [illegible]கள் நடக்கின்றனவாம்! அப் [illegible]என்னதான் அவர்கள் கத்தியும், [illegible]கம் முழுவதையும் பார்த்துவிட்டு [illegible]ழுகின்ற மக்கள், "ஈ இந்திரா காந்தியிண்ட அச்சன் யாரா?" என்றுதான் கேட்கின்றனராம்! ஆக, கலை வழிப் பிரசாரம் எந்த அளவுக்கு மக்களை ஈர்த்திருக்கிறது என்பதற்கு இதுவும் ஒருசான்று! ஆனால் பொதுவுடைமையரையும் கழகத்தவரையும் வைதுவிட்டு, கேரளத்தில் இப்போது கலையுலகை நாடியிருக்கும் காங்கிரசாரைப் பார்த்து என்ன சொல்லலாம்?

காங்கிரசு இறைச்சியா? பொதுவுடைமை இறைச்சியா?

மலைஞாலத்தில் கடந்த சில ஆண்டுகளாக ஒரு நல்ல பழக்கம் கிளம்பியிருக்கிறது. அங்குள்ள "காக்கா" உணவு விடுதிகளில் நீங்கள் போய் அமர்ந்து இறைச்சி கேட்டால், பணியாளன் உடனே "காங்கிரசு இறைச்சி வேண்டுமா? கம்யூனிஸ்ட் இறைச்சி வேண்டுமா?" என்பான். என்னை இப்படிக் கேட்டதும் திகைத்தேன். "புரியவில்லையே!" என்றேன்.

அதற்கு அந்தப் பணியாளன் சொன்னான்: "சாரே! கம்யூனிஸ்ட் இறைச்சி என்றால் ஆட்டிறைச்சி; காங்கிரசு இறைச்சி என்றால் மாட்டிறைச்சி! உங்களுக்கு எது வேண்டும்?"

நான் கம்யூனிஸ்ட் இறைச்சியைச் சாப்பிட்டு விட்டு வெளியே வந்தேன்.

பொதுவுடைமை!

மலைஞாலத்தில் பொதுவுடைமை இயக்கம் பல வழிகளில் தலைதூக்கியிருக்கிறதாம். நம்பூத்ரிபாடும் தாமசும் போற்றி வளர்த்துப் பங்குகொண்டிருக்கிற பொதுவுடைமை அவர்களுக்குப் பிடிக்கவில்லை என்றாலும், வேறு பல பொதுவுடைமைகள் காங்கிரசாராலும் பிறராலும் போற்றி வளர்க்கப்படுகின்றனவாம்! அடுத்தவன் சட்டையிலுள்ள பணத்தைப் பொதுவுடைமையாக்குவதில் திருடர்கள் முன்னணியில் நிற்கின்றனராம். அடுத்த வீட்டுக் குழந்தைகள் தின்னும் பலகாரத்தை பொதுவுடைமையாக்குவதில் இந்த வீட்டுக் குழந்தைகள் மும்மரமாயிருக்கின்றனவாம். இவற்றோடு இன்னொரு பொதுவுடைமையும் ஓங்கி வளர்கிறதாம் கேரளத்தில். காங்கிரசுப் பெண் தொண்டர்கள், பொதுவுடைமையை முன்னின்று வளர்ப்பதில் முழுமூச்சாயிருக்கின்றனராம். இரவு பகலின்றி, நேரம் காலமின்றி அங்கே, அந்தத் தொண்டர்கள் பொதுவுடைமைப் பணியில் ஈடுபட்டிருப்பதை, வட்டாரக் காங்கிரசுத் தலைவர்களும் புரந்தருளுகிறார்களாம். ஆனால் அங்குள்ள சில காவல்துறை ஊழியர்கள் இந்தப் பொதுவுடைமைக்கு எதிரிகளாக விட்டனராம். அண்மையில் கோட்டயத்தில் காங்கிரசுத் தலைவரும் அதே இயக்கத்தைச் சார்ந்த பெண் தொண்டர் ஒருவரும், இப்படிப் பொதுவுடைமை வளர்க்கும் திருப்பணியின்போது, இரவு 8 மணி அளவில் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். காவல் துறையினர் இப்படிப் பொதுவுடைமை வளர்ச்சியைத் தடுத்து இழுத்துச் சென்றதும், ஒரு பெரிய புகையிலை முதலாளி இவர்களுக்குப் பிணையம் அளித்து அழைத்துச் சென்றுள்ளார்.

கண்டிக்கிறேன்; கண்டிக்கிறேன்; வண்மையாகக் கண்டிக்கிறேன், பொதுவுடைமைத் திருப்பணியைத் தடைசெய்த காவல் துறையினரை!

வாழ்த்துகிறேன்; வாழ்த்துகிறேன்; வாழ்த்துகிறேன், பொதுவுடைமைக் காதலர்களை!

—செல்லையா.

உணர்வு தந்த பொங்கல்!

★

சீர்மிகு தமிழ கத்தில் செந்தமிழ் மொழியைக் காக்கும்
ஆர்வமே குன்றி விட்ட அச்செயல் ஒன்றி னாலே,
நேர்மையி லாத வேற்று மொழியெலாம் நிலைபெற் றிங்கே
பார்புகழ்த் தமிழ்ப்பண் பாட்டைப் பாழ்படச் செய்தல் கண்டோம்!

சீரிய அப்பண் பாடு சிதைந்ததால் தமிழ ரானோர்,
ஆரியப் பண்பாட் டிற்கே அடிமையாய் உழல லானார்!
நேரிய முறைஇ ழந்தார்! நீள்புகழ் மறந்தார்! இந்தப்
பாருளோர் இழித்துக் கூறும் பாங்கினை அடைய லானார்!

இழிவினைச் சகித்த தில்லை; யாவரா யிருந்த போதும்,
விழியினில் கனலைக் காட்டி வெற்றியே கண்டார் முன்னோர்!
பழிமிகும் பேத வாழ்வால் பகுத்தறி விழந்தே இந்நாள்,
அழிநிலை பெற்றுப் பூனை ஆயினர் புலியை யொத்தார்!

மானமே உயிராய்க் கொண்ட மறத்தமிழ் மரபில் வந்தோர்,
ஈனமாம் வாழ்வைப் போக்க யாதுமே முயலா ராகி
மோனமே கொள்ளக் கண்டு, மூண்டஇப் பழியைப் போக்க,
'**நானிதோ!**' என்று வந்த நற்றிரு பொங்கால், வாழி!

நீதரும் உணர்வி னாலே நீண்டநாள் உறக்கம் விட்டுப்,
பேதமும் பிளவு மேகப் பீடைகள் யாவு மோட,
ஓதிடும் கன்ன லன்ன உயர்தமிழ் மேன்மை கொள்ளத்,
தீதிலா உரிமை வாழ்வு திகழ்ந்திட முயல லானார்!

வாய்ந்தஉன் பெருமை கண்டார்! மாத்தமிழ் வலிமை கண்டார்!
தாழ்ந்துள நிலையைப் போக்கத் தன்மதிப் புணர்வு கொண்டார்!
தேய்ந்துள வாழ்வை மாற்றத் '**திராவிடம் வாழ்க!**' என்றார்.
ஆர்ந்தநல் லுணர்வைத் தந்த அரும்பெரும் பொங்கால், வாழி!

—புதுவை ச. சிவப்பிரகாசம்.

மலர் மணம்

மலர் மணம் பரப்புகிறது. தென்னாட்டவரின் உள்ளங்களைத் தெவிட்டும் வகை செய்யும் என்பதில் ஐயமில்லை. காவலரும் நாவலரும் காட்சிதரும் ஓவியங்களில் உயிரோடுகின்றது — மலருக்கு அவை மெத்தச் சிறப்பு.

தமிழ்ப் பேராசிரியர்களின் விருந்து மலருக்குத் தனிச் சிறப்பு. தேர்ந்து எடுத்த கவிதைகள்-நறுக்குத் தெறித்தாற்போன்ற கதைகள், நலம் கூட்டுகின்றன. "கல்லறை" சொல்லோவியம் மட்டுமல்ல; தோன்றாத் தோன்றலுமாகும். இவ்வாண்டுத் "தென்றல்" மலர் சீரிய முயற்சி-வளர்க "தென்றல்" நாளும்.

—பெரி. சிவனடியான், பீ. ஏ.
புதுவயல்.

★

தென்றல் அடித்தது!
தேன்மழை வடித்தது!
சென்ற மலரினும்
நன்றெனக் கண்டனர்.
அட்டையும் வண்ணமும்
அமைப்பும் நெஞ்சிலே
ஒட்டிக் கொண்டன!
உள்ளம் இனித்தது!
மயிலொடு வேந்தர்!
மரகதப் பச்சை
ஒயிலொடு நாவலர்!
சிரித்திடும் காட்சி!
எத்தனைப் பக்கம்!
எத்துணைப் பகுதிகள்!!
மொத்தப் புகழ்பெறும்
அத்தகு மலரே!

—நாவுக்கரசன், காரைக்குடி.

★

கண்டேன் 'தென்றல்' மலரை! நுகர்ந்தேன் மணத்தை! கல்லறை-கருத்துப் படையல்! கதைகள் எல்லாம் நன்று; காவியங்களும் அதுபோன்று! தங்களுடைய கவிதை வருமென்று எதிர் பார்த்தேன்; வரவில்லை; வருந்தினேன்! கதைகூட எழுதவில்லை; ஏனோ? ஆனால் அறிவிக்கவில்லை. அண்ணாவின் படமும், நாவலரின் படமும் நன்று! நன்று! பார்க்கப் பார்க்கத் தெவிட்டாதன! 'ஐயம் அகற்று' பகுதியில் ஈழத்து நண்பரின் கேள்விக்கு மலரில் பதில் அளித்து இருக்கக் கூடாது! தனியாகப் பதில் எழுதி இருக்க வேண்டும்!

— சி. தண்டபாணி, சென்னை-1.

★

மலர் கண்டேன்; மகிழ்ச்சி. தென்றல் ஒரு அரிய கலைக் கருவூலம்; ஆடி விழும் தேனருவி! எழுத்துக்கு எழுத்து, பக்கத்திற்குப்பக்கம் எழுத்துலக சிற்பிகளின் கைவண்ணம் மிளிருகிறது.

கே. முத்தையா, திருச்சி-2.

★

வித்தகர் போற்றும் சத்துநிறை தென்றல் பொங்கல் மலர் கண்டேன்; படித்துண்டேன்; களிகொண்டேன். தென்றல் கருவூலத்தின் விலை குறைவுதான். 300 காசுகள் மலர் என்று அறிவித்திருந்தாலும் தென்றல் மலர் கிடைத்திருக்காது. வாழ்க மலர்! வளர்க தென்றல்!!

-ஆத்தூர் அன்புசந்திரா, திருச்சி.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணைசலம், எ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6, தமிழ்நாடு
தொலைபேசி எண் 83510.